வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 84 பக்கங்கள் : 16





08 தேர்தல்கள் பற்றிய குழப்பமான கதைகள்


09 வெடுக்குநாறி வழிபாடு மறுப்பும் மணலாறை சிங்கள உரிமை ஆக்குவதும்


10 வைரஸ்களுக்கு உயிர் உண்டா?


11 மரதன் ஓடிய மாணவர் மரணம்: மருத்துவமனையை குற்றம் சாட்டும் தாயார்!

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

# உயிருக்கு உத்தரவாதம் தந்தால் உண்மைகளை வெளியிடுவேன்!

## மைத்திரி மீண்டும் அதிரடிக் கருத்து



கொழும்பு, மார்ச் 24

**“எனக்கு உயிர் அச்சுறுத்தல் உண்டு. என் உயிருக்கு உத்தர வாதம் தந்தால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குக் காரண மானவர்கள் குறித்து அறிவிப்பேன்.”**

**- இவ்வாறு நேற்று மீண்டும் அதிரடிக் கருத்தை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன.**

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்கு தெரியும் எனவும், அது தொடர்பில் நீதித்துறைக்குத் தகவல்களை வெளியிடத் தயார் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டியில் நேற்று முன் தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

அத்தோடு, இது தொடர்பில் நீதிமன்றம் கோரிக்கை விடுத்தாலோ அல்லது உத்தரவு பிறப்பித்தாலோ அது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் வெளியிட்ட தகவல் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை

15

## காத்துக்கொண்டிருக்காமல் உண்மையை சொல்லுங்கள்!

### மைத்திரிக்கு மகிந்த ஆலோசனை!



கொழும்பு, மார்ச் 24

நீதிமன்றம் அழைப்பு விடுக்கும் வரை காத்துக் கொண்டிருக்காமல் தெரிந்த உண்மையை மைத்திரிபால சிறிசேன பகிரங்கப்படுத்தவேண்டும். உண்மையை மறைப்பதும் ஒரு வகையில் குற்றமாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த

15

## மைத்திரிபாலவை உடன் கைது செய்க!

### முஷாரப் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 24

குற்றச் செயலையும், குற்றவாளிகளையும் மறைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உடன் கைதுசெய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன

15

## மைத்திரிபாலவின் கருத்தினால் கொழும்பு அரசியலில் பரபரப்பு!

### உடனடி விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு, மார்ச் 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நேற்று முன் தினம் வெளியிட்ட கருத்து தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலை உண்மையாகவே நடத்தியவர்கள் யார் என்பது குறித்து தனக்கு தெரியும்

15

## குற்றவியல் சட்ட மறுசீரமைப்பு திருத்தங்கள் மீளப் பெறப்படும்

### நீதி அமைச்சர் விஜேதாஸ அறிவிப்பு


கொழும்பு, மார்ச் 24

குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் மீள பெறப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

தண்டனை சட்டக் கோவைக்கு அமைவாக, 16 வயதிற்குட்பட்ட சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது உடல் ரீதியான தொடர்புகளை வைத்திருந்த ஒருவருக்கு தண்டனை வழங்கப்படும்.

எனினும், 14 முதல் 16 வயதிற்கு இடைப்பட்ட சிறுமிகள் தங்களின் விருப்பத்துடன் தொடர்புகளை பேணிய தகவல்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன.

15



## ரஷ்யத் தலைநகரில் பயங்கர தாக்குதல்!

### 143 பேர் உயிரிழப்பு!!

மொஸ்கோ, மார்ச் 24

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள வணிக வளாகத்தில் உள்ள அரங்கில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143 ஆக அதிகரித்துள்ளது. 145 பேர் காயமடைந்துள்ளனர்.

15

## மைத்திரிக்கு எதிராக சி.ஐ.டியில் ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 24

ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த

15

## ராஜபக்ஷக்களுக்கு நான் எதிரி அல்லன்!

### கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மார்ச் 24

“ராஜபக்சக்களுக்கு நான் எதிரி அல்லன். அவர்களும் எனக்கு எதிரி அல்லர். அவர்களிடமிருந்து நான் பிரதமர் பதவியையோ - ஜனாதிபதிப் பதவியையோ பறித்தெடுக்கவில்லை. நாடு எதிர்நோக்கிய நெருக்கடியான கட்டடத்தில் அவர்களே எனக்குப்

15

## ரெலோ தலைவராக மீண்டும் செல்வம்!



வவுனியா, மார்ச் 24

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுக்குழு கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் தலைவராக செல்வம்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் ஏற்பட்டுள்ள உட்கட்சி விவகாரத்தை சுமுமாகத் தீர்த்துவைக்கப் பலரும் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டுதான் இருக்கின்றனர் என்பதை அவ்வப்போது அறியமுடிகின்றது.

அண்மையில்கூட, சிறீதரன்-சுமந்திரனை சந்திக்க வைத்து அவர்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஒரு முயற்சி கொழும்பில் நடந்தது என்றும் அதுவும் இணக்கம் எதனையும் ஏற்படுத்த முடியாமலே முடிவடைந்ததாகவும் தெரியவந்தது.

இதுபோன்ற தகவல்கள் கிடைக்கின்றபோதெல்லாம் நமது மனதில் ஏற்படுகின்ற கேள்வி ஒன்றுதான். அநேகமாக உங்கள் ஒவ்வொருவருக்கும் அது ஏற்படலாம்.

அந்த விவகாரம் இப்போது நீதிமன்றத்தில் இருக்கின்றது. அதனை - அதாவது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்னையை நீதிமன்றம்வரை கொண்டு சென்றவர் நிச்சயமாக கட்சி நலனை மட்டும் கருத்தில்கொண்டு இதனைச் செய்திருக்க முடியாது. இதனை செய்தவருக்கு மட்டுமே அதன் உள்நோக்கம் என்ன என்பது தெரிந்திருக்கும். ஆனால், நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதுதொடர்பான செய்தி வெளியே வந்தபோதுதான் தங்களுக்கு அதுபற்றித் தெரிய வந்தது என்றே சிறீதரனும் சரி - சுமந்திரனும் சரி சொல்லி வருகின்றனர்.

அப்படியானால், இவர்கள் இருவரும் அடிக்கடி சந்திப்பதன் மூலம் எத்தகைய இணக்கப்பாட்டை இந்த வழக்கு விவகாரத்தில் அடைய முடியும் என்பதுதான் தெரியவில்லை. ஏனெனில், இந்த வழக்கைப் பொறுத்தவரை இருவருமே எதிராளிகள். ஒரு வழக்கில் எதிர்வாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்ட இருவர் அடிக்கடி சந்தித்து அந்த வழக்கை இணக்கப்பாட்டுடன் முடித்துவைக்க பேசுகின்றனர் என்பதுதான் பல கேள்விகளை ஏற்படுத்துகின்றன.

இப்போது வழக்கில் எதிர்த்தரப்பினராக பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் சுமந்திரன் தவிர மற்றைய அனைவருமே ஜனவரி 21ஆம் 27ஆம் திகதிகளில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்துவதை தடுக்க வேண்டும் என்ற கட்டாணையை ஏற்றுக்கொண்டுவிட்டதால் மீண்டும் பொதுச்சபைக்கும் செயல்குழுவுக்கும் புதிதாக ஆட்களை தெரிவுசெய்து - மீண்டும் தெரிவுகளை செய்வதற்கு ஒப்புதல் வழங்கிவிட்டனர். சுமந்திரன் மட்டுமே தனது பதிலை நீதிமன்றத்துக்கு இன்னமும் தெரிவிக்கவில்லை. ஆனால், பொதுச்சபைக்கு கட்சி யாப்பில் தெரிவிக்கப்பட்ட தொகையைவிட அதிக உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதான கருத்தை ஏற்கனவே சுமந்திரன் பகிரங்கமாக சிறீதரனுக்கு எழுதிய கடிதத்திலும் தெரிவித்திருந்தார். ஆகவே, அவரும் அந்தத் தவறை ஏற்றுக்கொள்வார் என்றே நம்பலாம். ஏனெனில், இந்தத் தவறுகளைச் செய்தது கடந்த பத்து ஆண்டுகளாக அதன் தலைவராக இருந்த மாவை சேனாதிராசாதான் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது, வழக்கை சுமுகமாக முடித்து வைப்பதற்காக இவர்கள் இருவரும் எதற்காக அடிக்கடி சந்திக்கின்றனர் என்பது தெரியவில்லை. உண்மையிலேயே இருவரும் இந்த வழக்கை சுமுகமாக முடித்துவைத்து கட்சியின் அலுவல்களை கொண்டு செல்வதென்றால், இருவருமாக வழக்காளியை அல்லவா சந்திக்க வேண்டும்? என்று ஒரு சட்டம் தெரிந்த ஊடக நண்பரிடம் கேட்டேன். அவர் சொன்ன தகவல் - அல்லது பதில் சற்று வித்தியாசமாக இருந்தது. தலைவர் தேர்வுக்கான தேர்தலில் சிறீதரனுக்குப் பதிலாக சுமந்திரன் வெற்றிபெற்று, அதற்கு பின்னர் இப்படி ஒரு வழக்கை யாரேனும் தாக்கல் செய்திருந்தாலும் அந்த வழக்கு இன்றிருக்கும் நிலையில்தான் இருந்திருக்கும். ஏனெனில், கட்சி யாப்பின்படி எந்த விடயமும் நடக்கவில்லை என்பதை சுமந்திரனே தனது பகிரங்கக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக சிறீதரனும் சுமந்திரனும் அடிக்கடி சந்தித்து இணக்கப்பாட்டை அடைய முயற்சிப்பதாகக் கூறப்படுவது ஏதோ, சிறீதரனால் இந்த விடயத்தைக் கையாள முடியவில்லை என்பது போலவும் அதனால்தான் இந்த விடயம் இழுபறியில் தொடர்கின்றது போலவும் ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி வருகின்றது என்றார் அந்த ஊடக நண்பர்.

ஆனால், வழக்கு என்று வந்துவிட்டால் எந்தச் சட்டம் தெரிந்தவர்கள் என்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு சில காலங்களைச் செலவுசெய்யத்தானே வேண்டியிருக்கும். அநேகமாக அடுத்த தவணையில் இல்லாவிட்டாலும் அடுத்தடுத்த தவணைகளிலாவது வழக்கு முடிந்துவிடும் என்று நம்புவோம்.

அப்படி இல்லாமல் அது தொடரும் என்றால், இவை எல்லாம் எப்போது முடிவான விடயங்களாகவே இருக்கும்.!

**- ஊர்க்குருவி.**

# காசநோயால் கடந்த வருடம் வவுனியாவில் 3 பேர் இறப்பு!

## 58 பேர் பாதிப்பு!!

வவுனியா, மார்ச் 24

காசநோயினால் வவுனியாவில் கடந்தவருடம் மூன்று பேர் இறப்படைந்துள்ளதுடன், 58 பேர் நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை "ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்" எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் மார்ச்24 ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது.

இலங்கையை பொறுத்தவரை ஒரு இலட்சம் பேரில் 62 பேர் காசநோயாளர்களாக இனம்காணப்படவேண்டும். இருப்பினும் 4 ஆயிரம்பேர் வரை இனம் காணப்படாமல் இருக்கின்றனர். நாட்டில் இறப்பிற்கு காரணமானமூன்றாவது நோயாக இது காணப்படுகின்றது. கடந்தவருடம் வவுனியாமாவட்டத்தில் 58 நோயாளர்கள் இனம்காணப்பட்டனர். அதில் மூன்றுபேர் உயிர் இழந்துள்ளனர்.

தொடர்ச்சியாக இரு வாரங்களிற்கு மேற்பட்ட இருமல் மாலைநேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொதுவைத்தியசாலைகளுக்கு சென்று சாதாரண சளிப்பரிசோதனையினை இலவசமாக செய்துகொள்வதன் மூலம் இந்த நோயினை இனம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே நோய் ஏற்ப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள், அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்,சிறுநீரக நோயாளர்கள்,மூட்டுவாதம் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய்கிருமி தங்ககூடும். அப்படியானவர்களுக்கு பரிசோதனையினை செய்வதன் மூலம் அதனை கண்டறியலாம்.

ஒருவருக்கு காசநோய் ஏற்ப்பட்டால் ஆறு மாதத்திற்கு நேரடி கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளை பெற்றுக்கொண்டால் அதனை முற்றாக குணப்படுத்தலாம். அது தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத்தவறினால் அது தீவிரமடைந்து இறப்பிற்கு வழிவகுக்கும்- என்றார். (அ)

# வீதி விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கையின்றி உடன் இழப்பீடு

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் விமான நிலையத்திலிருந்து வெளியில் வரும்போதே சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

வீதி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளின்றி உடனடியாக இழப்பீடு வழங்கும் வேலைத்திட்டமும் மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, விபத்து இடம்பெற்று ஒரு வருடத்திற்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் 05 இலட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள முடிவதோடு, அந்த தொகையை நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு கிளையிலும் பெற்றுக்கொள்ள கூடிய வசதிகள் வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வீதி விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையிலான பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளன. வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுபவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் அறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கும் காப்புறுதி நிறுவனங்களுக்கும் இடையில் இடம்பெற்ற தொடர் கலந்துரையாடலின் பலனாக நீதிமன்ற நடவடிக்கையின்றி விரைவாக இழப்பீடு வழங்கும் வேலைத் திட்டம் மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. மார்ச் 1 ஆம் திகதிக்கு பின்னரான விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

விபத்து இடம்பெற்று ஒரு வருடத்திற்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு கிளையிலிருந்தும் அதிகபட்சமாக 05 இலட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள முடியும். மாறாக பாதிக்கப்பட்டவர் மேலதிகமான இழப்பீட்டுத் தொகையை பெற எதிர்பார்க்கும் பட்சத்தில் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை நாடவேண்டும்.

இந்த நடவடிக்கை குறித்து இலங்கை பொலிஸார் மற்றும் பிரதேச செயலாளர்கள் கிராம சேவை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. - என்றார். (அ)

# 5,000 இஸ்லாமியர்களை திரட்டிய கிழக்கு ஆளுநர்

அம்பாறை, மார்ச் 24

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் காத்தான்குடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன் தினம் விசேட இப்தார் நோன்பு திறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

ரமழான் மாதம் தொடங்கி 11 நாட்கள் நிறைவடைந்துள்ளது. ஒவ்வொரு நாளும் பல்வேறு இடங்களில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சிகள் கிழக்கில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில், நேற்று முன் தினம் இப்தார் நிகழ்வில் ஐந்தாயிரத்திற்கும் அதிகமான இஸ்லாமியர்கள் பங்குபற்றினர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். யூ.அலி சப்ரி, மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம். எல். எம். ஏ. ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினர்காளான ஹபீப் முஹம்மட் முஹம்மட் ஹரீஸ், செய்யத் அலி சாஹிர் மௌலானா, எஸ். எம். எம். முஷாரப், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஜே. ஜே. முரளிதரன் உட்பட உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்கள், திணைக்கள தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனம், வர்த்தக சம்மேளனம், ஜம்மியத்துல் உலமா காத்தான்குடி கிளை உட்பட அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அமைச்சர் அலி சப்ரி மற்றும் மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் ஆகியோருக்கு அல்குரான் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

இப்தார் மாதத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் காஸா குழந்தைகள் நிதியத்திற்கு 5 இலட்சம் ரூபாய் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# செல்லுபடியாகாத நாணயமாக பஸில்

## சாடுகின்றார் பொன்சேகா

கொழும்பு, மார்ச் 24

**பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நெருங்கிய உறவு காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

எனினும், தற்போது அரசியல் வட்டாரத்தில் செல்லுபடியாகாத நாணயமாக திகழும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்புக்களை முன்னெடுப்பது அர்த்தமற்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் எந்த தேர்தலை முதலில் நடத்துவது என்பது தொடர்பான இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச ஆகியோருக்கிடையில் அண்மையில் நடைபெற்றன.

இந்த சந்திப்பு தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல் நடத்தப்படுமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க, அவரது அரசியல் நலன்களை கருத்தில் கொண்டு செயல்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஆலோசனைகளுக்கமைய ரணில் விக்கிரமசிங்க சில தீர்மானங்களை மேற்கொள்வார் எனவும் இந்த பின்னணியில், இலங்கை மக்களின் நலன் கருதி தாம் சில அரசியல் ரீதியான தீர்வுகளை மேற்கொள்ள நேரிடுமெனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (அ)

# தையிட்டியில் போராட்டம்




யாழ்ப்பாணம், மார்ச் 24

சட்டவிரோதமாக மக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று ஆரம்பமானது.

இந்த போராட்டம் தொடர் போராட்டமாக, ஒவ்வொரு பௌர்ணமி தினத்துக்கும் முதல்நாள் ஆரம்பமாகி பௌர்ணமி தினத்தன்று மாலை நிறைவடையும்.

அந்தவகையில் நேற்று ஆரம்பமாகிய இந்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# களு கங்கையில் மூழ்கி இருவர் பலி

கொழும்பு, மார்ச் 24

இரத்தினபுரி - கிரியெல்ல, எல்லகாவ பிரதேசத்தில் களு கங்கையில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

எல்லகாவ பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய யுவதியும், ஹொறொவப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இராணுவச் சிப்பாயுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிரியெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# எஞ்சிய நிதியுதவியையும் இலங்கைக்கு வழங்குவதற்கு நாணய நிதியம் இணக்கம்

கொழும்பு, மார்ச் 24

எஞ்சிய நிதியுதவியையும் இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு இலங்கை தகுதி பெற்றிருப்பது வெற்றி எனவும் பிரதமர் தெரிவித்தார்.

அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் புதிய சத்திர சிகிச்சை பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.




சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்ததாக பிரதமர் தெரிவித்தார்.

நாடு வளர்ச்சியை நோக்கிய நிலையான பாதையை அடைந்துள்ளதால், சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதாக பிரதமர் கூறினார்.

இதன்படி, எதிர்கால நிதியுதவியை விரைவில் வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 9 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மாமுனை, நாகர் கோவில் கடற்பகுதிகளில் சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபட்ட ஒன்பது பேரை கைது செய்த வெற்றிலைக்கேணி கடற்படையினர் ,மூன்று டிங்கிப் படகுகளையும் கைப்பற்றினர்.

ரோந்து நடவடிக்கைகளின் போது, கடற்படையினர் 03 சந்தேகத்திற்கிடமான டிங்கிப் படகுகளை இடைமறித்து சோதனையிட்டபோது சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 3 படகில் இருந்த 09 பேரையும் கைது செய்தனர்.

அத்துடன் அவர்கள் பயன்படுத்திய மூன்று டிங்கி படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கிளிநொச்சி மற்றும் மன்னார் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

09 சந்தேக நபர்களும் 03 டிங்கிப் படகுகள் மற்றும் உபகரணங்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# வெனிசியூலா பிரஜை கைது!

கொழும்பு, மார்ச் 24

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொக்கேய்ன் போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் 12 மாத்திரைகளுடன் நபர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய் யப்பட்டார்.

இலங்கை சுங்கப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர் கைதாகியுள்ளார்.

சந்தேகநபர் பிரேசிலில் இருந்து டுபாய் ஊடாக நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவர் வெனிசியூலாவைச் சேர்ந்த 41 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவரிடம் இருந்து 132 கிராம் எடையுடைய 12 மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அவை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு நாளை முதல் மதிய உணவு!

கொழும்பு, மார்ச் 24

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள 1,700,000 பாடசாலை மாணவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.




அத்துடன், இந்த வேலைத் திட்டத்திற்காக 26 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் கூறினார்.

# ‘புலவர் அமுது’ விருது வெலாஜினிக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம் நடந்த பட்டமளிப்பு விழாவில், கத்தோலிக்க நாகரிக இளங்கலை சிறப்பு பட்ட அதிசிறந்த பட்டதாரிக்கான ‘புலவர் அமுது’ (அடைக் கல முத்து) தங்கப் பதக்கத்தை அல்பேட் குணசூரியர் ஹெலன் வெலாஜினி பெற்றுக் கொண்டார்.




அண்மைக் காலத்தில், ஈழத்தின் புகழ்பூத்த புலவர் ஒருவராக திகழ்ந்த புலவர் அமுது பெயரிலான இந்த தங் கப் பதக்கத்தை இந்த ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் வழங்குவ தற்கு அவரது குடும்பத்தவர்கள் பல்கலைக்கழகத்துடன் ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

கடந்த வாரம் நிகழ்ந்த இந்த முதலாவது விருது வழங்கலில், புலவரின் மூத்த புதல்வர் நேரு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். (அ)

# 2,863 கோடி ரூபாயை திறைசேரிக்கு வழங்காத நெல் சந்தைப்படுத்தல் சபை

கொழும்பு, மார்ச் 24

நெல் சந்தைப்படுத்தல் சபையானது, இரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று கோடி ரூபாவை திறைசேரிக்கு செலுத்தத் தவறியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பன்னிரண்டு ஆண்டுகளில், கருவூலத்தில் பணம் இங்கே இருக்கும். அமைச்சர் மஹிந்த அமரவீரவின் காலத்தில் இது நடக்கவில்லை. இங்கு திறைசேரி நேரடியாக வழங்கிய பணமும், மக்கள் வங்கிக்கு உத்தரவாதமாக இலங்கை வங்கி வழங்கிய பணமும் அதில் உள்ளடங்கியுள்ளது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினை கடந்த சில வருடங்களாக கொள்கை மாற்றங்களுடன் ஒப்பிடுகையில் விவசாயத்துறை பெருமளவில் பாதிக்கப்பட்டது. அதன்பின்னர் நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டமையினால் அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகளை வழங்கமுடியாமல் போனது. ஆனால் தற்போது விவசாயிகளுக்கான சலுகைகளை மீண்டும் பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதியும் விவசாய அமைச்சரும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும் அரசாங்கம் என்ற ரீதியில் விவசாயிகளுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். நெல் கொள்வனவு விவகாரத்தில் நிதி அமைச்சு அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ)



# தாய்லாந்திலிருந்து கொழும்பு வந்தது அதிசொகுசு கப்பல்!

கொழும்பு, மார்ச் 24

தாய்லாந்தில் இருந்து 846 பயணிகள் மற்றும் 469 பணியாளர்களுடன் அதி சொகுசு கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

வைக்கிங் ஸ்கின் என்ற சொகுசு கப்பலே இவ்வாறு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பலில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பயணிகள் காலி மற்றும் கொழும்பு உள்ளிட்ட இடங்களுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெண்களுக்கான கிறீம்களால் புற்று நோய் ஏற்படுவது உறுதி

கொழும்பு, மார்ச் 24

கொழும்பின் சில பகுதிகளில் புற்றுநோயை உண்டாக்கும் கிறீம்கள் உள்ளிட்ட அழகு சாதனப் பொருட்களின் விநியோகங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றதாக, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் அஜித ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

பெண்களின் சருமத்தை விரைவாக வெண்மையாக்கும் என கூறி குறித்த கிறீம்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும்,இதனால் புற்றுநோய்கள் ஏற்படுவது உறுதி என்றும் தெரிவித்திருந்தார்.

இணைய சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விற்பனை செய்யப்படும் கிரீம் வகைகள் தரமற்றவை. மேற்கூறப்பட்ட க்ரீமினால் நிச்சயமாக புற்றுநோய் உருவாகும் என்பதில் சந்தேகமே இல்லை.

அத்துடன், இதன்போது உலக சுகாதார ஸ்தாபனத்தினால் தடைசெய்யப்பட்ட கிறீம்கள் உள்ளிட்ட அழகுசாதனப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவை இலங்கை சந்தையில் சூட்சுமமாக பயன்படுத்தப்படுகின்றது.

சில கிரீம்கள் இலங்கையின் பிரபல அழகுக்கலை பார்லர்களில் விற்பனைக்கு கூட வைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# நெருக்கடியில் விவசாயிகள்!

கொழும்பு, மார்ச் 24

விளைச்சலுக்கான உரிய விலையை பெற்றுக் கொள்ள முடியாமையினால் விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நெல் கொள்வனவு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை சுட்டிக்காட்டியிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ஆட்சி காலத்திலும் நாட்டின் விவசாயத்துறை கடுமையாக பாதிக்கப்பட்டது. குறிப்பிட்ட தொகைக்கு நெல்லினை கொள்வனவு செய்யாமையினால் சிறு போகம் பெரும்போகம் ஆகிய இரண்டிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

அதேபோல் தற்போதைய நிலையில் விவசாயிகள் தங்கள் விளைச்சலுக்கான உரிய விலையினை பெறமுடியாதுள்ளனர். உரிய விலைக்கு நெல்லினை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் விவசாயிகள் தொடர்ந்தும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே விவசாயிகளுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க முன்வருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன். ஏனென்றால் விளைச்சலுக்கான உரிய விலையை பெற்றுக்கொள்ள முடியாமையினால் அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர் - என்றார். (அ)

People's Petition
**Northern and Eastern Provinces Civil Society Group**
**வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு**

## கருத்தாய்வு

### ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி?

**காலம் : 06.04.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி**
**இடம் : தேவநாயகம் மண்டபம், அரசடி, மட்டக்களப்பு**

கருத்துரை:
**பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்**
(யாழ். பல்கலைக்கழகம்)
**யதீந்திரா**
(அரசியல் ஆய்வாளர்)
**அருட்திரு அகஸ்டின் நவரெட்ணம்**
(கிழக்கு பல்கலைக்கழகம்)
**"தேர்தலை எதிர்கொள்வது எப்படி? ஏன்?"**
**என்ற தலைப்பில்**
**அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்துரைப்பார்கள்**
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**'மக்கள் மனு'**
**வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக குழு.**

# வீதி விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கையின்றி உடன் இழப்பீடு

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15ஆம் திகதி முதல் விமான நிலையத்திலிருந்து வெளியில் வரும் போதே சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

வீதி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளின்றி உடனடியாக இழப்பீடு வழங்கும் வேலைத்திட்டமும் மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, விபத்து இடம்பெற்று ஒரு வருடத்திற்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் 05 இலட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொள்ள முடிவதோடு, அந்த தொகையை நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு கிளையிலும் பெற்றுக் கொள்ள கூடிய வசதிகள் வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வீதி விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையிலான பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுபவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் அறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கும் காப்புறுதி நிறுவனங்களுக்கும் இடையில் இடம்பெற்ற தொடர் கலந்துரையாடலின் பலனாக நீதிமன்ற நடவடிக்கையின்றி விரைவாக இழப்பீடு வழங்கும் வேலைத் திட்டம் மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. மார்ச் 1 ஆம் திகதிக்கு பின்னரான விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

விபத்து இடம்பெற்று ஒரு வருடத்திற்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு கிளையிலிருந்தும் அதிகபட்சமாக 05 இலட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள முடியும். மாறாக பாதிக்கப்பட்டவர் மேலதிகமான இழப்பீட்டுத் தொகையைப் பெற எதிர்பார்க்கும் பட்சத்தில் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை நாட வேண்டும்.

இந்த நடவடிக்கை குறித்து இலங்கை பொலிஸார் மற்றும் பிரதேச செயலாளர்கள் கிராம சேவை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
24.03.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சஜித் பிரேமதாச அணியின் நம்பிக்கை

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசவிற்கே வாக்களிப்பார்கள் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் தெரிவித்திருக்கின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சஜித் பிரேமதாச வடக்கு, கிழக்கில் மட்டுமே வெற்றிபெற்றிருந்தார். சஜித் பிரேமதாச, தான் இனவாதியில்லை என்றும் தனக்கே தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்னும் நம்பிக்கையிலேயே இருக்கின்றார் போலும். சஜித் பிரேமதாச தனிப்பட்டரீதியில் இனவாதியா அல்லது இல்லையா என்பதல்ல இங்குள்ள பிரச்னை - மாறாக, அவரது அரசாங்கத்தில் நிச்சயம் பலதரப்பட்டவர்கள் இருப்பார்கள் - ஒரு வேளை அவர் ஜனாதிபதியாக வந்தாலும் கூட, அவ்வாறானவர்களது எதிர்ப்புக்களை மீறி அவரால் செயல்பட முடியுமா - அதற்கான ஆளுமை அவருக்கு இருக்கின்றதா என்பதுதான் பிரச்னை.

இதேபோன்றுதான் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களுக்கு முன்னால் தன்னைவிட்டால் வேறு தெரிவில்லை என்பது போல் எண்ணிக் கொண்டிருக்கிறார் எனத் தெரிகின்றது. இதற்கு ஓர் அடிப்படையான காரணமுண்டு - அதாவது, தமிழ் மக்களின் வாக்குகளை பேரம் பேசும் கருவியாக பயன்படுத்திக்கொள்ளும் வகையில் செயல்படக் கூடிய நிலையில் தமிழ் கட்சிகள் இல்லை - அதே வேளை தமிழ் கட்சிகள் தங்களுக்குள் ஒரணியாகவும் இல்லை. இந்த விடயங்களையே ரணிலும் சஜித்தும் தங்களுக்கு சாதகமானதாக நோக்குகின்றனர்.

அடிப்படையில் இது ஆபத்தானது. ஏனெனில் தமிழ் மக்களை எவ்வாறும் கையாளலாம் என்னும் எண்ணத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிந்திப்பதானது, தமிழ் மக்களின் பலவீனமான நிலையையே எடுத்துக்காட்டுகின்றது.

2015 ஆட்சி மாற்றத்தின் போது, தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான பங்கை ஆற்றியிருந்தது. அந்த நேரத்திலும், ரணில், மைத்திரி மற்றும் சந்திரிகா என்னும் வகையில் தனிப்பட்டரீதியிலேயே விடயங்கள் கையாளப்பட்டன. அந்த நேரத்தில் எழுத்து மூல உடன்பாட்டின் அவசியத்தை கூட்டமைப்பு புறக்கணித்த போது, சந்திரிகா குமாரதுங்கவே, இப்போதும் எங்களை நம்புகின்றீர்களா - என்று கேட்குமளவிற்கு நிலைமைகள் இருந்தன.

பேரம் பேசும் வகையில் அரசியலை கையாளாது, வெறும் தனிப்பட்ட உறவுகளின் அடிப்படையில் விடயங்களை கையாண்டதன் விளைவுகளையே, தமிழ் சமூகம் கடந்த காலத்தில் அனுபவித்தது. தமிழ் தலைவர்கள் என்போரின் தூரநோக்கற்ற அரசியல் செயல்பாடுகளுக்கான விலையை தமிழினம் அளவுக்கதிகமாகவே கொடுத்துவிட்டது. இப்போது இழப்பதற்கு எதுவுமில்லாத நிலையையே, தமிழ் சமூகம் வந்தடைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில், இலங்கையின் அரசியலானது, தமிழ் மக்களின் வாக்குகளால் தீர்மானிக்கப்படும் ஒரேயொரு சந்தர்ப்பம் ஜனாதிபதி தேர்தல் மட்டும்தான். அதுவும் எப்போது, நிகழுமென்றால், தென்னிலங்கையின் சிங்கள தேசியவாத சக்திகள் பலவீனமான நிலையிலிருக்கின்ற போது, அல்லது தென்னிலங்கை அரசியல் ரீதியில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது மட்டும்தான், தமிழ் மக்களுக்கு அரசியல் முக்கியத்தும் கிடைக்கும். அந்த சந்தர்ப்பத்தை தமிழ் தலைமைகள் என்போர் புத்திசாதுரியமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அவ்வாறானதொரு வாய்ப்புக்கான அரசியல் சூழல் இப்போது கனிந்திருக்கின்றது. இதனை தமிழ் தலைமைகள் என்போர் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகின்றனர்? இந்தக் கேள்விக்கான பதில், தமிழ் மக்கள் தங்களின் வாக்குகளை ஒருமித்து, ஒரு பொது வேட்பாளரை நோக்கி குவிப்பதன் மூலம் மட்டுமே, அந்த வாக்குகளை ஓர் அரசியல் ஆயுதமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

# தாதியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது சிறந்ததல்ல

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

இந்நாட்டில் பயிற்றுவிக்கப்படும் 100 தாதியர்களில் 30 - 40 பேர் வரையிலானவர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றனர் என்றும், இதே நிலை தொடர்வது சிறந்ததல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

உலகின் உயர்வான சுகாதார சேவையை கொண்டிருக்கும் எமது நாட்டின் சுகாதார துறையை மேம்படுத்தி அதனை பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்திக்கொள்வது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் ட்றைவ் இலகுக் கடன் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை ஆரம்ப வைத்தியசாலையின் அவசர விபத்து மற்றும் சிகிச்சைப் பிரிவின் புதிய கட்டிடத்தை மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

வைத்திய மற்றும் தாதியர் சேவைக்காக பயிற்றுவிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திடம் தான் கோரிக்கை விடுத்திருப்பதாகவும், அதற்கான வசதிகளை மேம்படுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேநேரம் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையான மற்றும் பசுமை பல்கலைக்கழகத்திற்கான வைத்தியசாலை ஒன்றை நடத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் லயிசியம் வைத்தியசாலையும் அதற்கான கோரிக்கையை விடுத்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களையும் வைத்திய துறைக்குள் உள்வாங்கி நவீன வைத்திய முறைமைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினர். (அ)

# உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரியை அறிந்துள்ள மைத்திரியை பொலிஸ் உடன் அணுகவேண்டும்

### மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 24

"முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனக்கு உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரியை தெரியும் என பகிரங்கமாக கூறுகிறார். இது ஒரு அதிர்ச்சி தகவல் குண்டு. பொலீசார் உடனடியாக மைத்திரிபாலவை அணுகி, உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை வாக்குமூலமாக பெற வேண்டும். அதுபோல், இத்தனை நாள் ஏன் இந்த தகவலை அவர் மறைத்து வைத்தார் என்ற கேள்விக்கும் பதிலை வாக்குமூலமாக பெற வேண்டும். இந்த இரண்டு வாக்குமூலங்களின் அடிப்படையில் உடனடியாக பொலிஸ் விசாரணைகளை முடுக்கி விட்டு, குற்றவாளிகளை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்."

- கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய, மட்டக்களப்பு சீயோன் தேவாலயங்களிலும், கொழும்பு நட்சத்திர விடுதிகளிலும் கொல்லப்பட்ட அப்பாவிகளின் பெயரால் இதை நான் கூறுகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்ல வளவில் ஊடகங்களை சந்தித்த மனோ கணேசன் எம்.பி. இதுபற்றி ஊடகங்களுக்கு மேலும் கூறியதாவது,

நீதிமன்றம் கேட்டால், தான் உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை தருவேன் எனவும், அந்த தகவல்களை நீதிபதிகள் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் கூறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின், மூளையை பரிசோதனை செய்ய வேண்டும் என நான் நினைக்கிறேன்.


நீதிமன்றம் இவரை தேடி வந்து கோராது. இவர்தான் பொலிசை தேடி சென்று தகவல்களை வழங்க வேண்டும். குற்றவாளி பற்றிய தகவல்களை அறிந்த இவர் இதுபற்றி இதுவரை மௌனமாக இருந்தமை குற்றமாகும்.

தான் தரும் தகவல்களை நீதிபதிகள் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என ஏன் இவர் கூறுகிறார் என எனக்கு விளங்கவில்லை. பொதுமக்களின் வரிப்பணத்தில் பாதுகாப்பு பெற்று வாழும் இவர் யாரை கண்டு பயப்படுகிறார் எனவும் எனக்கு தெரியவில்லை.

இதுபற்றிய ஆணைக்குழுவில் சாட்சியம் அளித்த போது இதுபற்றி ஏன் ஆணைக்குழு அதிகரிகளுக்கு தன அறிந்த உண்மை தகவல்களை கூறவில்லை என்பதற்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதில் கூறி ஆக வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை இதுவரை மறைத்து வைத்தமை, மைத்திரிபால சிறிசேனவை பிடித்த ஒரு குற்றவியல் நோய். இந்த நோய் இலங்கை பொலீசுக்கும் வந்துவிடாமல் பொலிஸ் துறை அமைச்சர் டிரான் அலசும், பொலிஸ் மாஅதிபரும் கவனமாக செயலாற்ற வேண்டும். - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# நடேஸ்வராக் கல்லூரி கனடா பழைய மாணவரின் ஒன்றுகூடல்

கனடாவில் உள்ள நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் குளிர்கால ஒன்றுகூடல் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து சானுஸா சஞ்சயனின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

அடுத்து சங்கத் தலைவர் மார்க்கண்டு நிர்மலனின் உரை இடம் பெற்றது. 'நடேஸ்வராக் கல்லூரியின் வளர்ச்சிக்காக முடிந்தளவு சங்கத்தால் உதவிகளைச் செய்து கொண்டிருப்பதாகவும், தற்போது அருகில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டதால் தையிட்டியில் இருக்கும் பிள்ளைகள் கல்லூரி வீதி வழியாகக் கல்லூரிக்கு வருவதற்கு வசதிகள் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் புதிதாக வரும் பிள்ளைகளுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள அங்கத்தவர்கள் உதவி செய்ய முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைத்தார்.'



பாடசாலையின் தற்போதய அபிவிருத்தி நிலைபற்றிப் பழைய மாணவர் மகாலிங்கம் குமாரகுலதேவன் ஒளிப்பட விவரங்கள் மூலம் எடுத்துரைத்தார். இதைத் தொடர்ந்து வைஸ்னவி நந்தேஸ்வரன்,மாதங்கி சிவகுமார் ஆகியோரின் நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து பவித்திரன் ஈவராநந்தம், கிருஸ்ணபிள்ளை நீலவண்ணன், சின்னராசா தாசன் ஆகியோரது பாடல்கள் இடம் பெற்றன. தொடர்ந்து விதுஸா கௌரிபால், சாபினா கௌரிபால், மீனுசி கௌரிபால், காஈட்சிப் கௌரிபால் ஆகியோரது குழு நடனம் இடம் பெற்றது. இறுதி நிகழ்வாக கார்ஸா ஜனார்தனனின் நடனம் இடம் பெற்றது.

அடுத்து நடேஸ்வராக்கல்லூரியின் புதிய அதிபர் திரு. பாலகுமார் அவர்களின் ஒளிப்திவு செய்யப்பட்ட உரை காட்சிப்படுத்தப் பட்டது.

இரவு விருந்தைத் தொடர்ந்து கௌரிபால் கோபால், ஜெய்பாலன் கோபால் ஆகியோரது 'கர்னன்' பற்றிய நாட்டிய நாடகம் இடம் பெற்றது. மிகச் சிறப்பாக இருவரும் மேடையேற்றிப் பலரின் பாராட்டையும் பெற்றிருந்தனர். நிகழ்ச்சிகளைக் காப்பாளர் முரளிதரன் கொண்டு நடத்தினார். சின்னராஜா தாசனின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே முடிவுற்றது.

**- குரு அரவிந்தன்**

# சாதகமானதுதான் சாத்திரம்

கச்சேரிப் பெஞ்சனியர் கல்வீட்டுப் பணக்காரர்
கதிரித் தம்பியர் குத்தி முறிஞ்சவராம்
குமரியைக் கரை சேர்க்க கனகாலம்

அரிவரியில் படிச்ச அந்தநாள் நண்பரிடம்
அந்தரிச்சுப் போனவர் மகளின் பலன் பார்க்க

வக்கரிக்கும் சனிக்குமுதல் வளமாய் வருமெண்டார்
கொக்கரிச்சுத் திரியாதை வளவுக்குள் இருக்குதெண்டார்

புத்திரி கைபிடிச்சுப் புருஷனிடம் சேர்த்துவைக்க
பத்திரிகை நறுக்கெல்லாம் பத்திரமாய் பொக்கட்டில்
கத்தரித்துச் சேர்த்துவைத்து கலியாண விளம்பரத்தை

சிறுமாரி முன்னுக்குச் சிக்கலைத் தீர்ப்பமெண்டு
சாத்திரியை மறந்து சதாதரகர் சகவாசம்

எந்திரி ஒருத்தர் எடுப்பாய் பொருந்திச்சு
மந்திரியாரும் சொந்தமெண்டார் மறுக்காமல் கட்டுவாராம்

பரியாரி வந்தார் பத்தும் பொருத்தம்
டிஸ்பென்சரி போட டொனேஷன் கேட்டுநின்றார்

நொத்தாரிசுப் பயலொன்று நோகாமல் வந்துச்சு
சுவீகரிச்ச காணிகள் கிடைச்சபின் செய்வாராம்

பட்டதாரி வாத்தியார் பக்காவாப் பொருந்தி வந்தார்
டியூட்டரி நடத்தப் பத்துப் பரப்பு கேட்டார்

நாதாரிப் பொடியள் நாலுகோடி கேட்குதெண்டு
கோதாரித் தரகைவிட்டு கோவில்தான் தஞ்சமெண்டார்.

வதிரிப் பிள்ளையாரின் வாசற்படியில் வரங்கேட்டார்
உத்தரிப்பு போதுமையா வழிதாவென அழுதுவிட்டார்

சிவராத்திரி சாமப் பூசையில் செவிக்கினிய செய்திகேட்டு
பூந்திரிச் சிரிப்போடு பூரித்தார் கதிரித்தம்பி

வாரித் தம்பி மச்சானின் வாரிசு
ஆருயிர் காதலனாம் அன்பான மகளுக்கு

முந்திரித் தோட்டக்காரன் முதுசத் தோட்டக்காரன்
சகோதரி பொடிப்பிள்ளை சோக்கான மாப்பிள்ளை

முகரிக்குள்ள இருக்க வரிஞ்சுகட்டி அலைஞ்சனெண்டார்

சனவரி சதுர்த்தியண்டு வைச்ச நேர்த்திப்படி
பெருவாரியா பிள்ளையாருககுப் பொங்கல் வைத்து
பெப்ரவரி கழியப் பங்குனி உத்தரமண்டு
கதிரியர் மனைவி கௌரி கேட்டபடி
சரியாகப் பத்துக்கு சன்னதியில் தாலிகட்டாம்
வரிவரியா இதையெழுதி என்னையும் வரச்சொன்னார்

**- மகேசன் கஜேந்திரன்**

# இந்தவார ராசிபலன் 24.03.2024 - 30.03.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 11
திதி : சதுர்த்தசி

நல்ல நேரம்: 9.15 - 10.45 ராகு காலம் : 04.15 - 06.15

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் முனைப்புடன் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் முற்றிலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு பூர்ண வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களின் மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அதன் காரணமாக அந்தஸ்து கௌரவம் உயரும். மாணவர்கள் அக்கறையுடன் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சொந்த பந்தங்களுக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் நன்றாக நடந்து எதிர்பார்ப்புக்கு மேல் இலாபம் பெருகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எப்போதும் போல் மன மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத தனவரவு உண்டு. வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். ஆயினும், உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பயன்களையும் அடைவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சிலருக்கு சந்ததி விருத்தி ஏற்படும். தங்களுக்குப் பிடித்தமான, அழகான ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். பெரிய மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும் அரசு பணியாளர்களுக்கு எதிர்பார்த்த பதவிகள் தேடி வரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் வீட்டில் இன்பம் நிலைத்திருக்கும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். ஆயினும், ஓரளவு பணவரவு இருக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழுக் கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். அந்தஸ்து உயரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகப் பெரிய சாகசங்கள் புரிவீர்கள். கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலமாக பண வருவாய் அதிகரிக்கும். எடுத்த முயற்சிகள்யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். அரசுப்பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும்.

# தமிழ்நாடு: 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கவனிக்கப்படும் 10 முக்கிய வேட்பாளர்கள்!

இந்தியாவில் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்த லுக்கான வேட்பாளர்களை ஒவ்வொரு கட்சியும் இறுதி செய்து வருகிறது.

தமிழகத்தில் திமுக, அதிமுக, பாஜக, பாமக, தேமுதிக, தாங்கள் போட்டியிடும் இடங்களின் வேட்பாளர்கள் பட்டியலை இறுதி செய்து வெளியிட்டுள்ளது.

திமுக 21 இடங்களில், அதிமுக 33 இடங்களில், பாஜக 20 இடங்களில் தேமுதிக 5 இடங்களிலும் போட்டியிடுகின்றன. காங்கிரஸ், அமமுக இன்னும் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை.

இந்நிலையில் அறிவிக்கப்படுள்ள வேட்பாளர்களில் தேர்தல் களத்தில் கவனிக்கப்படும் 10 வேட்பாளர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

**கே. அண்ணாமலை**

தமிழ்நாடு பாஜக தலைவர் கே. அண்ணாமலை தேர்தலில் போட்டியிடுவது குறித்து கடந்த சில மாதங்களாகவே, பேச்சு அடிபட்டு வந்தது. நான் போட்டியிட மாட்டேன் என முதலில் கூறிய அண்ணாமலை, தலைமை அறிவித்தால் போட்டியிடுவேன் எனக் கூறியிருந்தார்.

அவர் கோவையில் போட்டியிடுவதை கடைசி நேர சஸ்பென்ஸ் ஆக வைத்திருந்தது பாஜக. திமுகவும் அதிமுகவும் அறிவித்த பிறகே, அண்ணா மலை அங்கு போட்டியிடுவதாக பாஜக அறிவித்திருந்தது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, பிரதமர் நரேந்திர மோதி மேற்கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் கோவையில் தான் நடைபெற்றது. தமிழகத்தில் பாஜக இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இரண்டு தொகுதிகளில் ஒன்று கோவை.

கடந்த 1998ஆம் ஆண்டு கோவை குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு தற்போதைய ஜார்கண்ட் ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றிருந்தார். உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் கோவை தெற்கிலிருந்து வானதி சீனிவாசன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், கோவை பாஜகவுக்கு முக்கியமான தொகுதியாகக் கருதப்படுகிறது. எனவே அந்தத் தொகுதியில் அண்ணாமலை போட்டியிட்டால், வெற்றி வாய்ப்பு இல்லாவிட்டாலும், பாஜகவின் வாக்கு சதவீதம் தமிழகத்தில் அதிகரிப்பதற்கான வாய்ப்பாக இருக்கும் என பாஜக கருதுகிறது.

**சிங்கை ராமச்சந்திரன்**

கோவையில் அதிமுக சார்பாகப் போட்டியிடும் இவர், முதல் முறை வேட்பாளர். தேர்தல் களத்துக்குப் புதிது என்றாலும், கட்சியின் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலச் செயலாளராக மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் நியமிக்கப்பட்டவர்.

அதிமுகவின் இளைஞர் அணி முகங்களில் பிரபலமான இவர், கோவை அதிமுக வட்டாரங்களில் கணிசமான செல்வாக்கைக் கொண்டவர்.

கோவையில் அண்ணாமலை வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை அடுத்து, "ஐ அம் வெயிட்டிங்" என்று பதிவிட்ட அவர், சமூக ஊடக தளங்களில் கணிசமான பின்தொடர்பவர்களைக் கொண்டு பிரபலமானவர்.

பாஜகவிலிருந்து களமிறங்கும் இளம் அண்ணாமலையை எதிர்த்துப் போட்டியிட இவரே சரியானவர் என்று அதிமுக தலைமை முடிவு செய்துள்ளது.

**தமிழிசை சௌந்தரராஜன்**

தமிழிசை சௌந்தரராஜன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதில் பாஜக தலைமை மிகக்



குறிப்பாக இருந்தது. எனவே அவர் வகித்து வந்த தெலங்கானா மாநில ஆளுநர் பதவியையும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் பதவியையும் ராஜினாமா செய்யச் சொல்லியிருந்தது கட்சித் தலைமை.

சென்னை, அவர் ஏற்கெனவே போட்டியிட்டுள்ள நகரம். பாஜக மாநிலத் தலைவராக இருந்தபோது, சென்னை நகர மக்களிடம், இளைஞர்களிடம் நெருங்கிப் பழகியவர்.

தடாலடியான அரசியல் பாணி இல்லாதவர், சாதி மதரீதியாக சர்ச்சைக்குரிய கருத்துகளைப் பொதுவெளியில் பகிரங்கமாகத் தெரிவிக்காதவர்.

மருத்துவரான தமிழிசை சௌந்தரராஜன் நகர்ப்புற மக்களுக்கான சரியான வேட்பாளராக இருப்பார் என்று பாஜக கருதியதால் தென் சென்னை வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

**விஜய பிரபாகர்**

மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகர் விருதுநகர் தொகுதியில் இருந்து தேமுதிக சார்பாகப் போட்டியிடுகிறார்.

விஜயகாந்த் மறைந்த சில மாதங்களில் நடைபெறும் தேர்தலில், அவர் பிறந்த ஊரான ராமானுஜபுரம் இருக்கும் விருதுநகர் தொகுதியில் போட்டியிடு கிறார்.

**ஏ சி சண்முகம்**

புதிய நீதிக் கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் பாஜக கூட்டணியில் தாமரை சின்னத்தில் வேலூரில் போட்டியிடுகிறார்.

கடந்த முறை அதிமுக கூட்டணியில் இருந்த அவர், தன்னை எதிர்த்து நின்ற திமுக அமைச்சர் துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்திடம் வெறும் 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

அதிமுகவில் இருந்து பாஜக அணிக்கு வந்த அவருக்கு இந்த முறை சீட் வழங்கி தாமரை சின்னத்தில் போட்டியிட வைத்திருப்பது பாஜகவுக்கு வெற்றி தோல்வியைத் தாண்டி சாதகமானதாகவே பார்க்கப்படுகிறது.

கல்வி நிலையங்கள் நடத்தி வரும் ஏ.சி சண்முகம், நடிகர் ரஜினிகாந்துக்கு நெருக்கமானவராக அறியப்படுகிறார்.

**கனிமொழி**

கடந்த முறை தூத்துக்குடியில் போட்டியிட்டு 3.47 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கனிமொழி, தூத்துக்குடி தொகுதியின் முதல் பெண் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுகவின் ஆதரவுடன், தூத்துக்குடிக்கான திட்டங்கள் முதலீடுகள் கொண்டு வரப்பட்டன. சமீபத்தில், வின்ஃபாஸ்ட் மின்வாகன உற்பத்தி ஆலை தூத்துக்குடியில் அமைக்கப்பட்டது.

ஏற்கெனவே இரண்டு முறை மாநிலங்களவை உறுப்பினரான கனிமொழி டெல்லி வட்டாரங்களில் கணிசமான செல்வாக்கைக் கொண்டவர்.

கடந்த தேர்தலில் 3.47 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவர், கட்சியின் துணைப் பொதுச் செயலாளரானார். அவர் தாயாரது சமூகமும் தூத்துக்குடியில் அவர் நிறுத்தப்படுவதற்கு ஒரு காரணம்.

**நயினார் நாகேந்திரன்**

திருநெல்வேலி தொகுதியில் பாஜக சார்பாகப் போட்டியிடுகிறார் நயினார் நாகேந்திரன்.

பாஜகவுக்கு மாநிலத்தில் உள்ள நான்கு சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரில் இவரும் ஒருவர். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு வரை அதிமுகவில் இருந்திருந்தாலும், நெல்லை தொகுதியில் பாஜக வேட்பாளராக நின்று வெற்றி பெற முடிந்தது.

இதற்கு தொகுதி மக்களிடம் அவர் கொண்டிருந்த தனிப்பட்ட செல்வாக்கு முக்கியக் காரணம்.

**ஆ. ராசா**

தனித்தொகுதியான நீலகிரியில் ஏற்கெனவே மூன்று முறை வெற்றி பெற்ற ஆ.ராசா தற்போது மீண்டும்



அதே தொகுதியில் இருந்து போட்டியிடுகிறார்.

தொகுதியில் நல்ல செல்வாக்கு பெற்ற ஆ.ராசாவுக்கு மீண்டும் சீட் வழங்கப்பட்டத்தில் ஆச்சர்யம் இல்லை. ஆனால் இதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது.

பாஜக அந்த தொகுதியில் நேரடியாக போட்டியிடும் என்பதும் அந்தத் தொகுதியில் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் நிறுத்தப்படுவார் என்பதும் எதிர் பார்க்கப்பட்டதே.

தனது கோட்டையாக இருக்கும் நீலகிரியில் பாஜக வேட்பாளர் ஒருவரை வீழ்த்துவது கடினமானதாக இருக்காது என்பதால், அங்கு நன்கு பரீட்சயமான ஆ.ராசாவையே மீண்டும் வேட்பாளராக நிறுத்தியுள்ளது திமுக.

**செல்வ கணபதி**

இவர் 1991இல் அதிமுக ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். பின் 1999இல் அதிமுகவின் சார்பாக சேலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 2008 ஆம் ஆண்டு திமுகவில் இணைந்து மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

கட்சியின் முதல் கட்டத் தலைவர்கள் பட்டியலில் இவர் இல்லாதபோதும், சேலம் தொகுதியில் நன்கு அறியப்பட்டவர்.

அவர் மீதிருந்த ஊழல் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்ட நிலையில், கடந்த முறை வெற்றி பெற்ற எஸ்.ஆர். பார்த்திபனுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு, செல்வ கணபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அவரை எதிர்த்து சேலத்தில் அதிமுக சார்பாக 31 வயது புதுமுகமான விக்னேஷ் நிறுத்தப்பட்டுள்ளார்.

**டிடிவி தினகரன்**

பாஜக கூட்டணியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் இணைந்து, இரண்டு தொகுதிகளில் போட்டியிடும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேனி தொகுதியில் 1998இல் அதிமுக வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். பின்பு மாநிலங்களவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்தத் தொகுதியில் சமூக செல்வாக்கையும் பெற்றுள்ளார் டிடிவி தினகரன். அவருக்கு எதிராக திமுக சார்பில் போட்டியிடும் தங்க தமிழ்ச்செல்வன் அமமுகவின் முன்னாள் முக்கிய நிர்வாகி ஆவார்.

**மேற்கு வங்கம்:**
**மமதா - மோடி யுத்தம்!**

தமிழகத்தில் முக்கிய வேட்பாளர்கள் பற்றிய கவனம் அதிகரிக்க, மேற்கு வங்கம் மாநிலத்திலோ மமதா பனர்ஜியா மோடியா என்ற கவனம் அங்கு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

மேற்கு வங்கத்தில் எந்தத் தொகுதியில் யார் நின்றாலும், இந்தத் தேர்தல் மோதிக்கும் மமதா பானர்ஜிக்குமானது. மேற்கு வங்கம் 'தீதி'யின் (மூத்த சகோதரி) மாநிலம். எங்கு பார்த்தாலும் இந்த விஷயம்தான் தெரிகிறது.

மமதா பானர்ஜி 34 ஆண்டுகள் ஆட்சி செய்த இடதுசாரி அரசுக்கு எதிராக 2011இல் வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தார். 2014 மக்களவைத் தேர்தலில் 42 இடங்களில் 34 இடங்களையும் பின்னர் 2016 சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று மேற்கு வங்கத்தில் தனது இருப்பை நிலைநாட்டினார்.

ஆனால், 2019 மக்களவைத் தேர்தலில் பாஜக 18 இடங்களில் வெற்றி பெற்று அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. 2024 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 400இற்கு மேலான தொகுதிகளில் வெல்ல வேண்டும் என பாஜக இலக்கு நிர்ணயித்துள்ளது. குறிப்பாக சந்தேஷ்காலி, ஊழல், வேலையில்லா திண்டாட்டம் போன்ற பெரிய பிரச்னைகள் இருக்கும் நேரத்தில், 2019 மக்களவை தேர்தலைப் போல் இந்த முறையும் மேற்கு வங்கத்தில் பாஜக வெற்றி பெறுமா?

(14ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல்கள் பற்றிய குழப்பமான கதைகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தல் நடைபெறுமா அல்லது பாராளுமன்ற தேர்தல் முறை யில் மாற்றங்களைச் செய்வதற்காக தேர்தல்கள் தாமதிக்கப்படுமா என்ற கேள்விகள் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.



ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகுமாறு அண்மையில் அமைச்சரவைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தபோதிலும், ராஜபக்சாக்கள் பாராளுமன்ற தேர்தலே முதலில் நடத்தப்படவேண்டும் என்ற வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்சவுடனும் பசில் ராஜபக்சவுடனும் முதலில் ஜனாதிபதி விக்கிரமசிங்க நடத்திய பேச்சுவார்த்தையில் கூட்டணி அமைப்பது தொடர்பிலோ அல்லது தேர்தல்கள் தொடர்பிலோ அவர்களுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்படவில்லை. அரசியலமைப்பின் பிரகாரம் அக்டோபர் நடுப்பகுதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாக தெரிகிறது

சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் பெருமளவானோர் முதலில் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று விரும்பியதாகக் கூறப்பட்டது. பசில் அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய பிறகு அந்தக் கோரிக்கை வலுவடைந்திருக்கிறது. ஆனால், அந்த கோரிக்கைக்கு ஜனாதிபதியை இணங்க வைக்க ராஜபக்சாக்களினால் முடியுமா என்பது முக்கியமான கேள்வி.

பசில் ராஜபக்ச இரண்டாவது தடவையாக ஜனாதிபதியைச் சந்தித்தபோது பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை



அவரிடம் முன்வைத்தார். ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்னதாக பொதுஜன பெரமுனவினதும் அதன் நேசக்கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்ததாகவும் பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்துவது குறித்து உடனடியான தீர்மானம் ஒன்றை ஜனாதிபதியிடம் எதிர்பார்க்கவில்லை என்று ஊடகங்களுக்கு பசில் கூறினார். மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடத்தி அது தொடர்பில் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது என்றே அவர் கூறுகிறார்.

அடுத்த பாராளுமன்ற தேர்தல் 2025 ஆகஸ்ட் - செப்டெம்பர் காலப்பகுதியில் தான் நடத்தப்படவேண்டும். ராஜபக்சாக்கள் விரும்புவது போன்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அந்த தேர்தலை நடத்துவதற்கு வசதியாக பாராளுமன்றத்தை தற்போது கலைக்குமாறு ஜனாதிபதியைக் கோருவதற்கு சபையில் பொதுஜன பெரமுன் உறுப்பினர்கள் சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் பிரேரணையொன்றை நிறைவேற்ற முடியும். ஆனால், அதற்கு கட்டுப்பட்டு அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், பாராளுமன்றத்தை எந்த நேரத்திலும் கலைப்பதற்கான அதிகாரம் தற்போது ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஜனாதிபதி தேர்தலிலுக்கு அவர் முக்கியத்துவம் கொடுப்பதால் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு இணங்கமாட்டார்.

அதேவேளை, தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் முதற்தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்கள். ஐந்து வருடப் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதால் அவர்கள் கலைப்பை விரும்பமாட்டார்கள்.

**தங்களின் ஆதரவுடன் ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வருவதாக இருந்தால் கூட அவரது கட்சி பாராளுமன்ற தேர்தலில் கணிசமான வெற்றியைப் பெறக்கூடாது என்று சகோதரர்கள் நினைக்கிறார்கள்.**

தங்களது ஆட்சிக் காலத்தில் எப்போதுமே ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரே பாராளுமன்ற தேர்தலை நடத்திய ராஜபக்சாக்கள் தங்களது தற்போதைய நிலைப்பாட்டை நியாயப்படுத்த விசித்திரமான காரணத்தை முன்வைக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு பாராளுமன்ற தேர்தலை நடத்தினால், புதிய ஜனாதிபதியின் கட்சிக்கே மக்கள் அமோக ஆதரவை வழங்குவார்கள் என்பதால் அவர்கள் நிதானமாகச் சிந்தித்து அறிவுபூர்வமாக வாக்களிப்பதை உறுதிசெய்வதற்கு முதலில் பாராளுமன்ற தேர்தலே நடத்தப்படவேண்டும் என்று அண்மையில் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் பசில் கூறினார்.

**அடுத்த அரசாங்கம் பலம்பொருந்தியதாக அமையக்கூடாது என்பதற்காகவே எண்ணத்தில் தான் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் என்று ராஜபக்சாக்கள் கோருகிறார்கள்.**

தங்களது ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி தேர்தல்களுக்கு பிறகு நடத்தப்பட்ட பாராளுமன்ற தேர்தல்களில் நாட்டு மக்கள் அறிவுபூர்வமாக வாக்களிக்கவில்லை என்பதை இதன் மூலமாக அவர் ஒத்துக்கொள்கிறார்.

அது மாத்திரமல்ல, 2010, 2020 பாராளுமன்ற தேர்தல்களுக்கு பிறகு தங்களது குடும்பத்தின் அதிகார நலன்களை வலுப்படுத்தும் நோக்கில் அரசியலமைப்பு திருத்தங்களையும் ஜனநாயக விரோத சட்டங்களையும் கொண்டுவருவதற்காக சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு கட்சித் தாவல்களை ஊக்குவிப்பதில் தனது முக்கிய பாத்திரத்தை மறந்தவராக அவர் தற்போது பேசுகிறார்.

அண்மைய எதிர்காலத்தில் தங்களால் ஆட்சிக்கு வரமுடியாது என்பதால் அடுத்த பாராளுமன்றம் தாங்களும் செல்வாக்கு செலுத்தக்கூடிய முறையில் கட்சிகளின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்ற எதிர் பார்ப்பில் தான் பசில் மக்கள் அறிவுபூர்வமாக வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியம் குறித்தும் முற்று முழுதான அதிகாரத்தின் பாதகங்கள் குறித்தும் பேசுகிறார் என்பது தெளிவானது.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குரல் கொடுத்திருக்கிறார்.

"எமது யோசனை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுபவரின் கட்சியே பாராளுமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெறும். அது நாட்டுக்கு நல்லதல்ல. தேர்தல்களுக்கு பிறகு நாட்டில் நியாயமான சூழ்நிலையொன்று இருக்க வேண்டியது முக்கியமானதாகும்" என்று அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இனிமேல் எந்த கட்சிக்கும் கிடைக்கக்கூடாது என்பதே ராஜபக்சாக்களின் விருப்பமாக இருக்கிறது என்பதை சகோதரர்களின் கருத்துக்களில் இருந்து தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது

ஜனாதிபதி தேர்தலில் தங்களது கட்சியின் சார்பில் வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்று பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் முன்னர் பேசியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். இப்போது அவ்வாறு பேசுவதை அவர்கள் நிறுத்திவிட்டார்கள். தங்களது கட்சி பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெறுவதற்கான சாத்தியம் இல்லை என்பதனால், பலம்பொருந்திய அடுத்த அரசாங்கம் ஒன்றை ராஜபக்சாக்கள் விரும்பவில்லை. அதனால் தான் அவர்கள் அடுத்த ஜனாதிபதியின் கட்சி பாராளுமன்ற தேர்தலில் பெரிய வெற்றியைப் பெறக்கூடாது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற தேர்தல் முதலில் நடத்தப்படுவதை விரும்பவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் அரசாங்கம் முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்பின் விளைவாக ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்க வெற்றிபெறும் வாய்ப்பு இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சி நம்புகிறது.

அமைப்புரீதியாக மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் அந்த கட்சி பாராளுமன்ற தேர்தலுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை. ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால் அவரின் கட்சியின் வாய்ப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்ற ராஜபக்ச சகோதரர்களின் கோரிக்கை குறித்து ஜனாதிபதி கருத்து எதையும் இதுவரை வெளிப்படையாகக் கூறவில்லை. தேர்தல்கள் தொடர்பில் முரண்பாடான நிரைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும் கூட ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதை தவிர ராஜபக்சாக்களுக்கு வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

மீண்டும் விக்கிரமசிங்க (தங்களின் ஆதரவுடன்) ஜனாதிபதியாக வந்தாலும் கூட அவரது அரசாங்கம் உறுதியானதாக இருப்பதை ராஜபக்சாக்கள் விரும்பப்போவதில்லை. தேர்தல்களுக்கு பிறகு நாட்டில் நியாயமான சூழ்நிலை பேணப்படவேண்டும் என்பதே தங்கள் விருப்பம் என்று அவர்கள் கூறினாலும் சஞ்சலமான அரசாங்கம் ஒன்று பதவிக்கு வருவதே தங்களது நலன்களுக்கு உகந்தது என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

பொதுஜன பெரமுனவும் ஜே வி.பி.யுமே வலுவான அமைப்புரீதியான கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கின்ற அதேவேளை பொதுஜன பெரமுனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியுமே போதுமான மக்கள் ஆதரவைக் கொண்டிருக்கின்றன என்று தொலைக்காட்சி நேர்காணலில் பசில் கூறினார். ஐக்கிய தேசிய கட்சிக்கு உறுதியான கட்டமைப்புக்களும் மக்கள் ஆதரவும் இல்லாவிட்டாலும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# வெடுக்குநாறிமலையில் வழிபாடு மறுப்பும் மணலாறை சிங்கள உரிமையாக்குவதும்

## வடக்கையும் கிழக்கையும் முழுமையாக தொல்பொருள் நிலமாக்கும் இலக்கா?

பனங்காட்டான்

வெடுக்குநாறி மலையிலுள்ள சிவலிங்கத்தை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டு பூசை நடத்தச் சென்றவர்களில் எண்மரை கைது செய்த காவற்துறையினர் அவர்கள் மீது குற்றம் சுமத்த முடியாதிருந்த நிலையில் நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது.

சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஆலோசனை அல்லது அறிவுறுத்தலின் பேரிலேயே நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்ததாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், இலங்கையின் நாடாளுமன்றத்திலுள்ள சிலரால் இதனைப் பொறுக்க முடியவில்லை.

சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான காவற்துறை அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் கோதபாயவின் வியத்கம குழுவின் முக்கியஸ்தரும் கடற்படையின் முன்னாள் அதிகாரியுமான சரத் வீரசேகர ஆகிய இருவரும் முடிந்தளவுக்கு இதனை தமது கைகளில் எடுத்து "பொரிந்து" தள்ளியுள்ளனர். அதாவது, தமிழ் மக்களை மிக மோசமாக அச்சுறுத்தியுள்ளனர். நாடாளுமன்றம் தங்களுக்கு வழங்கியுள்ள பேச்சு பாதுகாப்பு உரிமையைப் பயன்படுத்தி இவர்களின் பயமுறுத்தல் எச்சரிக்கை அமைந்துள்ளது.

வெடுக்குநாறி மலையில் கோயில் எதுவும் இல்லை என்ற அமைச்சர் டிலான் அலஸின் கூற்று ஊடகங்களில் பிரபல்யமாக வந்துள்ளது. அது போன்று, "வெள்ளவத்தை கோயிலை இடித்து பௌத்த வழிபாட்டில் ஈடுபட முடியுமா?" என்ற கேள்வியை மறைமுக அர்த்தத்தில் சரத் வீரசேகர வீசியுள்ளார்.

இங்கு முதலில் கவனிக்க வேண்டியது சட்டம் ஒழுங்கைக் கவனிக்கும் பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான டிரான் அலஸின் உரையையே. இந்த அமைச்சுப் பதவியை ஏற்ற நாளிலிருந்து இவரின் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக தமக்கு நெருக்கமான தேசபந்து தென்னக்கோனை ஜனாதிபதி ரணிலை வலியுறுத்தி பொலிஸ் மாஅதிபராக நியமித்தது, போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பது என்ற பெயரில் தெற்கில் நாளாந்தம் இடம்பெறும் கொலைகள் என்பது பற்றி மாறுபட்ட செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

எதற்கெடுத்தாலும் எச்சரிக்கை விடுவதையே தமது பாணியாக மேற்கொண்டு வரும் இவர் தம்மை அதிஉத்தம சிங்கள பௌத்தராக வெளிப்படுத்த முனைந்து வருகிறார். இவ்விடத்தில் இவரது பின்னணியை சற்று நோக்க வேண்டும். 1967ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் ஸ்தாபக அதிபராக பதவியேற்ற ஆர்.ஐ.ரி.அலஸ் அவர்களின் மூன்று புதல்வர்களில் மூத்தவர் இவர். 1980களில் கல்வி அமைச்சராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அதிபர் ஆர்.ஐ.ரி.அலஸிற்கும் இடையில் வெளிவராத முரண் ஏற்பட்டதால் 1982ல் இவரை அப்பாடசாலையிலிருந்து அதிரடியாக ரணில் இடமாற்றம் செய்தார்.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் சில அமைச்சர்கள் தலையிட்டும் இடமாற்றத்தை ரத்துச் செய்ய ரணில் இடம் கொடுக்கவில்லை. 1989ல் ஜனாதிபதியான பிரேமதாச ஆர்.ஐ.ரி.அலஸ் அவர்களை டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் அதிபராக மீண்டும் நியமனம் செய்தார்.

ஆர்.ஐ.ரி.அலஸ் செட்டி சமூகத்தைச் சேர்ந்தவர் என்று அப்போது பலராலும் அறியப்பட்டவர். இவர் முன்னர் றோயல் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபோது அவரது மாணவராக இருந்த ரணிலுடன் ஒத்துப்போகாத காரணத்தினாலேயே அவரை பழிவாங்கும் நோக்குடன் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியிலிருந்து ரணில் வெளியேற்றியதாகவும் அப்போது சொல்லப்பட்டது.



இந்துக்களின் வழிபாட்டுக்குரிய வெடுக்குநாறிமலையை தொல்பொருள் மரபுரிமை சிங்கள பௌத்த மயமாக்குவதும், மணலாறில் அரச குடியேற்றம் செய்யப்பட்ட சிங்களவர்களுக்கு காணி உரிமையை வழங்கி அதன் சொந்தக்காரர்கள் ஆக்குவதும் தமிழ் மண்ணைப் பட்டப்பகலில் கபளீகரம் செய்யும் முன்னெடுப்பு. காலப்போக்கில் வடக்கையும் கிழக்கையும் முழுமையாக தொல்பொருள் நிலமாக்கும் இலக்கை செயற்படுத்த "ரணில் அன்ட் கோ" திட்டமிட்டு செயற்படுத்தினாலும் கேட்பதற்கு தமிழர் தரப்பில் யாருளர்?

இன்று ரணிலின் ஆட்சியில் அந்த அதிபரின் புதல்வரான டிரான் அலஸ் தம்மிகஷ்டப்படி இயங்கி இனநல்லுறவை சீரழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். இவரையே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடுவதற்கான செயற்பாட்டுக் குழு தலைவராக ரணில் நியமித்திருக்கிறார். இந்த வகையில் தமது இடத்தை தக்க வைத்துக் கொள்ள சிங்கள பௌத்தத்தின் காவலராக அமைச்சர் டிரான் அலஸ் தம்மை காட்டிக் கொள்ள முனைவதாக ஆட்சித்தரப்பில் கருத்து நிலவுகிறது.

வெடுக்குநாறிமலை விடயம் தொடர்பாக டிரான் அலஸ் மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டதை ஈழநாடு பத்திரிகை இந்த மாதம் 22ம் திகதிய இதழின் முதற்பக்கத்தில் தெரிவித்துள்ளது. பௌத்தத்துக்கு இடையூறு செய்தால் கைதுகள் தொடரும், வெடுக்குநாறி பௌத்த தலம் அனுரதபுர யுகத்துக்கு உரியது, 2023ல் இங்கு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதால்தான் பிரச்சனையானது என்பவை இவரது கூற்றுகள்.

இதற்கான அடிப்படை, இந்த இடம் தொல்பொருள் திணைக்களத்தின் பௌத்த மரபுரிமையைக் கொண்டதென இவர் நிலைநாட்ட முயற்சிப்பதானது. பௌத்த மத மரபுரிமைகள் உள்ள பகுதியில் பிறிதொரு தரப்பினர் மத வழிபாடுகளை முன்னெடுத்தால் முரண்பாடுகள் வரும் என்ற இவரது எச்சரிக்கை நிகழ்காலத்துக்கு மட்டுமன்றி எதிர்காலத்துக்குமானது. அதேசமயம் 2023ல் வெடுக்குநாறிமலையில் சட்டவிரோதமான முறையில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டதால்தான் பிரச்சனை தோற்றம் பெற்றது என்றும் இவர் விளக்கியுள்ளார்.

ஆனால், சரத் வீரசேகர வேறு கதை சொல்கிறார். வெடுக்குநாறிமலையிலிருந்த பழைமையான பௌத்த தூபி இடித்தழிக்கப்பட்டு அதன்மீது சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்பது இவரது (கண்டுபிடிப்பு) குற்றச்சாட்டு. இலங்கையின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பதவி வகிக்கும் இவரின் கூற்று, அமைச்சர் டிரான் அலஸ் சொல்வதற்கு மாறானது. அப்பட்டமான பொய்களை அவிட்டுவிட்டு சிங்கள பௌத் தர்களை உசுப்பி தமிழருக்கு எதிராக எழுச்சி கொள்ளச் செய்யும் நோக்கம் கொண்டது சரத் வீரசேகரவின் குற்றச்சாட்டு.

அது மட்டுமன்றி, தேவையற்ற விதத்தில் வெள்ளவத்தை (பிள்ளையார்) கோயிலை வெடுக்குநாறிமலையுடன் இணைத்து, இந்தக் கோயில் மீதும் அராஜகம் புரிய வைக்கும் நோக்கில் கருத்து வெளியிட்டுள்ளார். இந்தக் கோயிலை இடித்து பௌத்த வழிபாடுகளில் ஈடுபட முடியுமா என்ற இவரது கேள்வி வேறு உள்ளர்த்தம் கொண்டது.

"இந்தக் கோயிலை ஏன் இடிக்கக் கூடாது" என்ற தீய சிந்தனையை எவராவது ஒருவரின் காதில் போட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இவர் இருப்பது தெரிகிறது.

1983ம் ஆண்டு யூலை இன அழிப்புக்கு சில நாட்களுக்கு முன்னர் லண்டன் ரெலிகிராப் பத்திரிகைக்கு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வழங்கிய செவ்வியில், யாழ்ப்பாண தமிழரை பட்டினி போட்டால் சிங்களவர் சந்தோசப்படுவர் என்றும், தமிழர்கள் பற்றி தமக்கு அக்கறை கிடையாதென்றும் கூறியவைகளே அந்த இனஅழிப்புக்கு விதையானது என்பதை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்போது டிரான் அலஸ், சரத் வீரசேகர ஆகியோர் அதனையே செய்வதற்கு முற்படுகின்றனர் போலவே தெரிகின்றது. தமிழர்கள் தங்கள் வழிபாட்டுக்குச் செல்லும் அனைத்து இடங்களையும் தொல்பொருள் பௌத்த மரபுரிமை இடங்கள் என்று கூறி தடைபோடுவது அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. இந்நிலை தொடருமானால் தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் தொல்பொருள் மரபுரிமைக்கு உட்படுத்துவது அரசாங்கத்துக்கு சிரமமானதல்ல.

தமிழர் தங்கள் சொந்தப் பணத்தில் காணிகளை வாங்கி தங்கள் மனஅமைதிக்காகவும் வழிபாட்டுக்காகவும் நிர்மாணித்து வரும் ஆலயங்களை அரசாங்க நிதியில் கட்டப்படும் பௌத்த வழிபாட்டுத் தலங்களுடன் ஒப்பிடக்கூடாது என்பதுகூட தெரியாதவர்களாக(?) சிங்கள அரசியல்வாதிகள் இருப்பதும், அவர்களின் போக்கை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களின் தலைவர்கள் இருப்பதும் தொடருமானால், இன்னொரு இனசங்காரத்துக்கு அவர்கள் நீர் ஊற்றுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இந்தப் போக்குக்கு ஒத்தாசை வழங்குவது போன்று ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய செயற்பாடுகள் காணப்படுகின்றன. "உறுமய" என்ற சிங்களப் பெயர் கொண்ட புதிய திட்டமொன்றின் கீழ் 20 லட்சம் பேருக்கு காணி உரிமம் வழங்கும் திட்டமொன்றை இவர் ஆரம்பித்துள்ளார். வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டது இந்தத் திட்டம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ராணுவ வசமுள்ள 234 ஏக்கர் காணியை விடுவிக்கும் நிகழ்ச்சிக்காக அங்கு சென்ற ரணில் விக்கிரமசிங்க, சமவேளையில் உறுமய திட்டத்தையும் அரங்கேற்றியுள்ளார். இதன்போது 408 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்களை கையளித்துள்ளார். இந்த உரிமைப் பத்திரம் பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மையினர். இதிலும் முக்கியமானவர்கள் மணலாறு பிரதேசத்தில் குடியேற்றப்பட்டவர்கள்.

மணலாறு, நாயாறு என்ற பெயர் கொண்ட பிரதேசங்கள் வடக்கின் எல்லைப் பகுதிகள் மட்டுமன்றி வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் தொடு பிரதேசங்களும்கூட. கொழும்பில் வாழ்ந்த செல்வந்தர்களான சில தமிழர் (செனட்டர் நீதிராஜா, சினிமாஸ் குணரட்ணம் உட்பட்ட பலர்) 1960களின் பிற்பகுதியில் இங்கு விவசாயப் பண்ணைகளை ஆரம்பித்து பல தமிழ்க் குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுத்து வாழ்வளித்து வந்தனர். சிங்கள ராணுவ மேற்பார்வையில் இக்குடியானவர்கள் அடித்துத் துரத்தப்பட்டும், கொல்லப்பட்டும் காணாமலாக்கப்பட்டனர். மண்ணைப் பிடித்த ராணுவம் மணலாறை வெலிஓயா எனப் பெயர் மாற்றியது. மணல்(வெலி) ஆறு (ஓயா) என்பது சுத்த தமிழ்ப் பெயரின் சிங்கள மாற்றுப்பெயர்.


இங்கு குடியேற்றப்பட்டவர்களில் பலரும் சிங்கள சிறைக்கைதிகள், பயங்கர குற்றவாளிகளின் குடும்பத்தினர் என்பது அப்போது வெளிவந்த தகவல். முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்திலிருந்த இப்பிரதேசத்தை சிங்கள மயமாக்கவதற்காக அனுராதபுர மாவட்டத்தின் கீழ் அரசாங்கம் மாற்றியது. இதனோடு இணைந்ததாக ராணுவ அதிகாரியின் பெயரிலான ஜனகபுர உருவாக்கப்பட் டது.

மணலாறை நிரந்தரமான சிங்களப் பிரதேசமாக்க அங்கு குடியேற்றப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாண வைபவத்தில் வைத்து காணி உரிமையை வழங்கிய ரணில் விக்கிரமசிங்க, அத்துடன் நிறுத்தாது "எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் அவர்களுக்கு காணி உரிமை கிடைக்க வேண்டும்" என்று தெரிவித்தது, தமிழர் பிரதேசங்களில் சிங்களவர் குடியேற்றப்படுவதையும் காணிகள் நிரந்தரமாக்கப்படுவதையும் தமது அரசின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துள்ளதை பகிரங்கப்படுத்தியதாகும்.

இந்துக்களின் வழிபாட்டுக்குரிய வெடுக்குநாறிமலையை தொல்பொருள் மரபுரிமை சிங்கள பௌத்த மயமாக்குவதும், மணலாறில் அரச குடியேற்றம் செய்யப்பட்ட சிங்களவர்களுக்கு காணி உரிமையை வழங்கி அதன் சொந்தக்காரர்கள் ஆக்குவதும் தமிழ் மண்ணைப் பட்டப்பகலில் கபளீகரம் செய்யும் முன்னெடுப்பு. காலப்போக்கில் வடக்கையும் கிழக்கையும் முழுமையாக தொல்பொருள் நிலமாக்கும் இலக்கை செயற்படுத்த "ரணில் அன்ட் கோ" திட்டமிட்டு செயற்படுத்தினாலும் கேட்பதற்கு தமிழர் தரப்பில் யாருளர்?

நன்மாறன் திருநாவுக்கரசு

# வைரஸ்களுக்கு உயிர் உண்டா?



நாம் அஞ்சும் கண்ணுக்குப் புலப்படாத விஷயங்களில் ஒன்று வைரஸ். வைரஸ்கள் ஏராளமான நோய்களைப் பரப்புகின்றன. அவற்றால் மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்குகள், தாவரங்கள் ஏன் மற்றொரு நோய் பரப்பும் நுண்ணுயிராகக் கருதப்படும் பாக்டீரியாக்களுக்குக்கூட பாதிப்புதான்.

வைரஸ்களைக் கொல்வதற்கு நாம் ஏராளமான மருந்துகளைப் பயன்படுத்துகிறோம். இருப்பினும் அவை எல்லாவற்றிலும் தப்பித்து, வளர்ந்து கொண்டே இருக்கின்றன. வைரஸ்களை நாம் நுண்ணுயிராகக் கருதிக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அவை உயிரினமே



இல்லை என்கின்றனர் விஞ்ஞானிகள். அவை உயிரினம் இல்லையென்றால், வேறு என்ன?

உயிர்கள் என்றால் என்ன என்பதற்கு விஞ்ஞானிகள் சில வரையறைகளைக் கொடுத்துள்ளனர். உயிர்கள் ஒன்று அல்லது பல செல்களால் உருவாக்கப்பட்டிருக்கும். அவை வளர்சிதை மாற்றம் என்கிற ஒழுங்கமைக்கப்பட்ட வேதி வினைகளை உடலுக்குள் நடத்துவதன் மூலம் ஆற்றலை உற்பத்தி செய்கின்றன. அதேபோல் உயிர்கள் தன்னிச்சையாக இனப்பெருக்கம் செய்யக்கூடிய தன்மையையும் பெற்றுள்ளன.

பெரும்பாலான வைரஸ்கள் மேற்கூறிய எந்தச் செயல்பாட்டிலும் ஈடுபடுவதில்லை. உடலுக்குள் வளர்சிதை மாற்றம் செய்வதற்கான அமைப்புகளோ செல்களோ அவற்றுக்குக் கிடையாது. அதேபோல அவற்றால் தன்னிச்சையாக இனப்பெருக்கம் செய்ய முடியாது. இப்படி உயிரினங்களுக்கு இருக்கவேண்டிய பல பண்புகள் இல்லாத தாலேயே வைரஸை விஞ்ஞானிகள் உயிரினமாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

ஆனால், வைரஸ் ஓர் உயிரினம் இல்லை என்றால் அது மனிதர்களை எப்படிப் பாதிக்கிறது? எப்படி இனப்பெருக்கம் செய்கிறது?

வைரஸ் என்பது உயிரினங்களின் செல்லைவிட மிகச் சிறிய ஒன்று. பெரும்பாலும் வைரஸ்களை எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்களால் மட்டுமே பார்க்க முடியும்.

வைரஸ்களின் உடலில் மற்ற உயிரினங்களில் உள்ளதுபோல டி.என்.ஏ, ஆர்.என்.ஏ என்கிற மரபுப் பொருள்கள் இருக்கும். இந்த மரபுப் பொருள்கள் காப்சிட் எனப்படும் புரத உறையால் மூடப்பட்டிருக்கும். உள்ளே உள்ள மரபுப் பொருள்களுக்கு இந்த உறை பாதுகாப்பை வழங்குகிறது. இதுதான் வைரஸின் அமைப்பு.

வைரஸ்கள் இனப்பெருக்கம் செய்வதற்கு வேண்டிய அம்சங்களை உயிரினங்களின் செல்களிடம்இருந்துதான் பயன்படுத்திக் கொள்கின்றன.

வைரஸ்கள் ஓர் உயிரினத்தைத் தேர்ந்தெடுத்து அதன் உடலில் ஒட்டிக்கொள்கின்றன. பிறகு அந்த உயிரினத்தின் செல்லுக்குள் தமது மரபுப் பொருளான டி.என்.ஏவை (அல்லது ஆர்.என்.ஏவை) செலுத்துகின்றன. இதுதான் அந்த உயிரினத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்து கிறது.

பொதுவாக எல்லா உயிரினங்களின் செல்களுக்குள்ளும் டி.என்.ஏ இருக்கும். டி.என்.ஏ என்பது தகவல் பெட்டகம். ஓர் உயிரினத்தின் உடலுக்குள் புரதங்கள் எப்படி உற்பத்தியாகி, இயங்க வேண்டும் என்கிற தகவலை டி.என்.ஏதான் கொண்டிருக்கும். இந்தத் தகவலின்படிதான் வேதி வினைகள் நடைபெற்று நம் உடல் இயங்குகிறது. நமது செல்லில் உள்ள ரைபசோம் உள்ளிட்ட சில அமைப்புகள் இந்த டி.என்.ஏ தகவலைப் படித்துப் பார்த்துப் புரதங்களை உற்பத்தி செய்கின்றன.

இப்போது நம் உடலுக்குள் நுழையும் வைரஸ் அதன் டி.என்.ஏவை செல்லுக்குள் செலுத்தும்போது, அங்கே உள்ள அமைப்புகள் நம் டி.என்.ஏவில் உள்ள தகவலுக்குப் பதிலாக வைரஸின் டி.என்.ஏவில் உள்ள தகவலைப் படித்துப் பார்த்து அதன்படி வேலை செய்யத் தொடங்கும். அப்போது நம் உடலுக்கு வேண்டாத புரதங்கள் உற்பத்தியாகும் போதோ, வேறு செயல்பாடுகள் நடைபெறும் போதோதான் நாம் பாதிப்படைகிறோம்.

அதேபோல நம் உடலுக்குள் நுழையும் வைரஸின் டி.என்.ஏ, செல்களின் அமைப்புகளைப் பயன்படுத்தி, தன்னையே பிரதி எடுக்கும் வேலையையும் செய்கிறது. இதனால் செல்களுக்குள் அதிக அளவில் வைரஸ்கள் உற்பத்தியாகும்போது அது செல்லின் சவ்வைச் (Cell Membrane) சிதைத்துவிடுகிறது. இப்படித்தான் வைரஸ்கள் நம் செல்களைப் பாதிக்கின்றன.

சில வைரஸ்கள் தமது மரபுப் பொருள்களைச் செல்லுக்குள் செலுத்தும்போது, அவை உடனே வெளிப்படாமல் சில காலத்துக்கு மறைந்தே இருந்து அந்த உயிரினத்தின் மரபுப் பொருளின் ஒரு பகுதியாகவே ஆகிவிடுகின்றன. இப்போது அந்த உயிரினங்களில் செல் உற்பத்தி நடைபெறும் போது, அந்த வைரஸ்களும் தானாகவே பெருகத் தொடங்கி விடுகின்றன. இப்படித்தான் வைரஸ்கள் நம் உடலைப் பாதிக்கின்றன.

பெரும்பாலும் வைரஸ்கள் உடலில் நுழைந்து பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கிய உடனே நமது ரத்த வெள்ளை அணுக்கள் அவற்றைக் கண்டறிந்து அழித்துவிடும். ஆனால், ஹெச்.ஐ.வி போன்ற கொடிய வைரஸ்கள் நேரடியாக நோய் எதிர்ப்பு மண்டலத்தையே தாக்குவதால் மற்ற நோய்கள் நம் உடலை எளிதாகப் பாதித்துவிடுகின்றன.

இந்தப் பூமியில் ஏராளமான வைரஸ்கள் இருக்கின்றன. அவை பல வழிகளில் பலதரப்பட்ட செல்களைப் பாதிக்கின்றன. ஆனால், அவை பாக்டீரியாக்களைப் போன்று உயிரைக் கொல்லும் மற்றோர் உயிர் கிடையாது. அவை வெறும் டி.என்.ஏவைக் கொண்டிருக்கும் துகள் என்றுதான் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

உயிரற்ற பொருள்களிலோ இடத்திலோ இருந்தால் அவற்றால் எதுவும் செய்ய முடியாது. அவை தாமாகவே சிறிது சிறிதாகச் சிதைந்துவிடும். ஆனால், அதுவே உயிரினங்களுக்குள் நுழைந்துவிட்டால் அவற்றின் ஆட்டம் தொடங்கி எவ்வளவு பெரிய உயிரையும் வீழ்த்திவிடும்.

சரி, வைரஸ் உயிரினமாகக் கருதப்படாவிட்டால் நாம் தயாரித்துள்ள மருந்துகள் எப்படி வைரஸ் தாக்குதலைத் தடுக்கின்றன? வைரஸ் தடுப்பு மருந்துகளின் நோக்கமே அவற்றைச் செல்களுக்குள் நுழைய விடாமல் தடுப்பதுதான். அவற்றால் உயிரினத்தின் உடலில் நுழைய முடியவில்லை என்றால், பாதிப்பை ஏற்படுத்த முடியாது அல்லவா? நாம் சோப்பு போட்டுக் கைகழுவுவதுகூட வைரஸ் நம் உடலில் ஒட்டிக்கொண்டு உள்ளே சென்று விடாமல் தடுப்பதற்காகத்தான்.

அதேபோல அவை பிரதி எடுப்பதையும் மருந்துகள் தடுக்கின்றன. வைரஸைப் பிரதி எடுக்காமல் தடுத்துவிட்டால், புதிய செல்களை உருவாக்க முடியாமல் அவை உடலிலிருந்து அழிந்து விடுகின்றன. •



# திருக்கோவிலில் மரதன் ஓடிய மாணவர் மரணம்: மருத்துவமனையை குற்றம் சாட்டும் தாயார்!

மரதன் போட்டியில் கலந்து கொண்ட அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் மரணமடைந்தமை தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

மறுபுறம், அந்த மாணவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமையினை அடுத்து, குறித்த வைத்தியசாலை இம்மாதம் 11ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளது.

இதனால், அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், மேற்படி மாணவர் மரணித்த தினத்தன்று வைத்தியசாலையின் உள்ளே சிலர் உட்புகுந்து - அங்கிருந்த வைத்தியர்களை அச்சுறுத்தியதாக வைத்தியசாலை தரப்பு கூறுகிறது.

எனவே, அந்த நபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வரை வைத்தியசாலையைத் திறக்க முடியாது என வைத்தியசாலை நிர்வாகமும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் கூறுகின்றன.

இது இவ்வாறிருக்க, திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் அலட்சியமே தனது மகனின் மரணத்துக்குக் காரணம் என்று உயிரிழந்த மாணவரின் தாய் கவிதா கூறுகின்றார்.

இலங்கையில் நிலவும் கடும் வெப்பத்துடனான கால நிலையைக் கருத்தில் கொண்டு, பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் வெளிப்புற நிகழ்வுகளை நடத்த வேண்டாம் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில், திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதாகவும், அதில் கலந்துகொண்ட மாணவரே உயிரிழந்தாகவும் பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.



இன்னொருபுறம், மரதன் போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கான மருத்துவச் சான்றிதழ் - உயிரிழந்த மாணவரிடம் பெறப்படவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில், மாணவரின் மரணத்துடன் தொடர்பான விஷயங்களை ஆராயும் பொருட்டு, அந்த விஷயத்துடன் தொடர்பான தரப்பினரைச் சந்தித்து தகவல்களைத் திரட்டியபோது:

திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஜே. விதுஜன் 2007ஆம் ஆண்டு பிறந்தவர். அவர் தனது ஊரிலுள்ள மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் 10ஆம் வகுப்பு படித்து வந்தார். சிறு வயதிலிருந்தே விதுஜன் விளையாட்டில் ஆர்வமுள்ளவர் என்று அவரின் அம்மா கூறுகின்றார்.

திருக்கோவிலில் உள்ள பிரபல விளையாட்டுக்கழகம் ஒன்றின் கிரிக்கெட் அணியில் விளையாடும் விதுஜன், தினமும் மைதானத்தில் அதிக தூரம் ஓடுவதை வழக்கமாகக் கொண்டவர் என அறிய முடிகிறது. மேலும், விதுஜனுக்கு எந்தவிதமான நோய்களும் இருக்கவில்லை என்றும் அவரின் தாயார் கூறுகின்றார்.

இந்த நிலையில்தான் திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடைபெறும் 'இல்ல விளையாட்டுப் போட்டிகள்' கடந்த 11ஆம் தேதி நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருந்தன.

அதன் ஆரம்பப் போட்டியாக காலை 6.50 மணியளவில் 16 வயதுக்கு மேற்பட்டோருக்கான மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றது. இதில் 33 மாணவர்கள் கலந்து கொண்டதாகவும், 6.5 கிலோமீட்டர் தூரத்தைக் கொண்டதாக இந்தப் போட்டி அமைந்திருந்ததாகவும் பாடசாலையின் அதிபர் திருமதி ஜி.கே. தட்சணாமூர்த்தி தெரிவித்தார். அதில் ஓடிய விதுஜன் 6ஆம் இடத்தைப் பெற்றார்.

மேற்படி மரதன் போட்டி ஆரம்பித்ததில் இருந்து முடியும் வரை, அதில் கலந்துகொண்ட தனது மகனைப்



பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளை ஓட்டியவாறே தான் சென்றதாக விதுஜனின் தாய் கூறினார்.

**“மருத்துவச் சான்றிதழ் பெற்றோம்”**

குறித்த மரதன் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவச் சான்றிதழ்கள் பெற்றுக்கொண்ட பின்னரே, அவர்களைப் போட்டியில் கலந்து கொள்வதற்கு அனுமதித்ததாக, விதுஜனின் பாடசாலை அதிபர் தட்சணாமூர்த்தி கூறியதோடு, விதுஜன் பெற்றுக் கொண்டதாகக் தெரிவித்த மருத்துவச் சான்றிதழையும் காட்டினார்.

குறித்த மரதன் போட்டியின் தூரத்தை முழுவதுமாக ஓடி முடித்த விதுஜன், அசாதாரண உடல் நிலையை உணர்ந்தாகவும், அவர் பாடசாலையில் இருந்து நபர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்குச் சென்றதாகவும் அவரின் பாடசாலை பிரதியதிபர் எஸ். உதய தர்ஷன் கூறுகின்றார்.

மேலும், மேற்படி மரதன் போட்டியில் கலந்து கொள்வதற்காகப் பதிவு செய்திருந்த மாணவர்கள் இருவர் மருத்துவச் சான்றிதழ்களின் படி, அந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்றும், அதனால் நடைபெற்ற மரதன் போட்டியில் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் பிரதியதிபர் குறிப்பிட்டார்.

இது இவ்வாறிருக்க, 'அதிக வெப்பம் நிலவுகின்றமையால் வெளி நிகழ்வுகளை நடத்த வேண்டாம்' என அறிவுறுத்தும் வகையில், கல்வியமைச்சின் அறிவித்தல் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்று கூறிய அதிபர், வெயில் நேரத்துக்கு முன்னதாக காலை வேளையிலேயே மரதன் போட்டியைத் தாங்கள் நடத்தி முடித்து விட்டதாகவும் குறிப்பிட்டார்.

மருத்துவமனையில் என்ன நடந்தது?

இந்த நிலையில், திருக்கோவில் வைத்தியசாலை தரப்பினரின் அலட்சியம் காரணமாகவே தனது மகன் உயிரிழந்தாக விதுஜனின் தாய் கவிதா கூறினார்.

“எனது மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 10 நிமிடங்களில் நான் அங்கு சென்றுவிட்டேன். ஆனால் எனது மகனைப் பார்ப்பதற்கு முக்கால் மணிநேரம் வரை என்னை அனுமதிக்கவில்லை. அதன் பிறகு பலவந்தமாக நான் உள்ளே சென்றேன். அங்கு நான் கண்ட காட்சி அதிர்ச்சியளித்தது.

எனது மகன் கட்டிலில் படுத்திருந்தார், ஒரு வைத்தியர் தனது இரண்டு முழங்கால்களையும் எனது மகனின் நெஞ்சில் வைத்துக்கொண்டு அவரின் கைகளால் எனது மகனின் நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தார்.

'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்' என்று கேட்டேன். உங்கள் பிள்ளையின் உயிருக்காக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம் என்று கூறிவிட்டு என்னை வெளியில் அனுப்பி விட்டார்கள்,” என்று கூறினார் விதுஜனின் தாய்.



மேலும், “எனது மகனின் உயிர் அந்த வைத்தியசாலையிலேயே பிரிந்து விட்டது. ஆனாலும், அதைக் கூறாமல், மேலதிக சிகிச்சைக்காக எனக் கூறி, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டார்கள்,” என்றார்.

வைத்தியசாலையிலுள்ள ஒட்சிசன் இயந்திரத்துக்கு மின்சாரத்தை வழங்குவதற்குப் பொருத்தமான வட்ட வடிவ 'பிளக்' வைத்தியசாலையில் இருக்கவில்லை என்றும், அதனால் அருகிலிருந்த பாடசாலையில் இருந்து அதைக் கொண்டு வந்து கொடுத்ததாகவும் கூறிய விதுஜனின் தாய், “அதன் பின்னரே எனது மகனுக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டது” என்றார்.

இப்படி 3 மணிநேரத்துக்கும் அதிகமாகத் தனது மகனை திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைத்திருந்ததாகவும், அவர் மரணித்துவிட்ட பிறகுதான் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு, மேலதிக சிகிச்சைக்கு எனக் கூறி, திருக்கோவில் வைத்தியசாலையினர் உடலை அனுப்பி வைத்ததாகவும் விதுஜனின் தாய் குறிப்பிட்டார்.

“திருக்கோவில் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இருக்கிறது. ஆனால் அதனை ஓட்டுவதற்கான சாரதி இல்லை என்றும், நோயாளியை கொண்டு செல்வதற்காக வசதிகள் அம்புலன்ஸில் இல்லை என்றும் கூறினார்கள். அதன் காரணமாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸை அழைத்து, அதில்தான் எனது மகனைக் கொண்டு சென்றார்கள்,” எனவும் கவிதா கூறினார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு தனது மகன் அனுப்பப்பட்ட பின்னர் தாம் அங்கு சென்றதாகவும், அங்குள்ள வைத்தியர் ஒருவர் தனது மகன் ஒரு மணிநேரம் முன்பாகவே இறந்துவிட்டார் என்று கூறியதாகவும் விதுஜனின் தாய் குறிப்பிட்டார்.

**வைத்தியசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்**

விதுஜன் இறந்த செய்தியை அடுத்து, அவர் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு எதிராக அன்றைய தினம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வைத்தியசாலையின் வெளியில் இருந்த பெயர் பதாகை உடைக்கப்பட்டதோடு, வைத்தியசாலை மீது கற்கள் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும், விதுஜன் படித்த பாடசாலையின் மாணவர்களும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் சீருடைகளுடன் கலந்து கொண்டனர்.

இதையடுத்து அங்கு போலீசாரு அதிரடிப்படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், விதுஜனின் மரணம் தொடர்பில் தங்களுக்கு எதிராகக் கூறப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை தரப்பு மறுக்கிறது. விதுஜன் வைத்தியசாலைக்கு



வரும்போதே அவரின் இதயத்துடிப்பு மிகவும் குறைந்திருந்ததாக அந்த வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் கூறினார்.

பின்னர் அவருக்குப் பல தடவை இதயச் செயலிழப்பு (cardiac arrest) ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். ஒருவர் தாங்கக் கூடிய அளவை விடவும் அதிகளவான உடல் வேலையில் ஈடுபடும்போது இவ்வாறு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், விதுஜனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக வைத்தியசாலையில் இருந்த அனைத்துத் தரப்பினரும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விதுஜன் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் மருத்துவ சான்றிதழ், சாதாரண உடல் ஆரோக்கியம் தொடர்பில் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ் என்றும், மரதன் போட்டியில் கலந்து கொள்வோருக்கென தனியான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்காக விதுஜனின் பாடசாலை நிர்வாகத்தினர் தம்மிடம் கோரிக்கை விடுக்கவில்லை என்றும் வைத்தியசாலை தரப்பு கூறுகிறது.

இதன் காரணமாக, திட்டமிட்டிருந்த தேதியில் மரத்தன் போட்டியை நடத்த வேண்டாம் என திருக்கோவில் வயலக் கல்வி அலுவலகத்தின் அதிகாரி ஒருவருக்கு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியசட்சகர் தொலைபேசி ஊடாக அறிவித்ததாகவும் வைத்தியசாலை தரப்பு கூறுகிறது.

இந்நிலையிலேயே திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு எதிராக (14ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் அருந்த வேண்டும்?

**- ஜெஸிகா பிரவுன்**

நீங்கள் சோர்வாக இருந்தாலும் சரி அல்லது உங்கள் சருமம் வறண்டு காணப்பட்டாலும் சரி, அதனை சரிசெய்ய அதிக தண்ணீர் குடிக்குமாறு மற்றவர்கள் உங்களிடம் சொல்லியிருப்பார்கள்.

ஆனால், எங்கு சென்றாலும், தண்ணீர் போத்தல்களை எடுத்துச் செல்லும்போது, நம் உடலுக்குத் தேவையான தண்ணீரைக் காட்டிலும் அதிகமாகக் குடிக்க நேரிடலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலானோர் ஓர் அமர்வில் ஒரு கப் தண்ணீருக்கு மேல் குடிப்பதில்லை என, ஹைட்ரோபதியின் நிறுவனர் வின்சென்ட் ப்ரிஸ்னிட்ஸ் கூறுகிறார். தண்ணீர் மூலம் சிகிச்சை அளிப்பது ஹைட்ரோபதி எனப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் அதிக லீற்றர் தண்ணீர் குடிப் பது, நல்ல ஆரோக்கியம், அதிக ஆற்றல் மற்றும் சிறந்த சருமத்திற்கான ரகசியம் என்றும் உடல் எடை குறையும், புற்றுநோயை தடுக்கும் எனக்கூறும் செய்திகளை நாம் அதிகமாக காண்கிறோம்.

**தண்ணீர் குடிப்பதற்கான விதி**

தண்ணீரை அருந்துவதற்கென "8x8 விதி" என்ற ஒன்று இருக்கிறது. அதன்படி, ஒரு நாளைக்கு எட்டு 240 மி.லி. அளவுக்கு தண்ணீர் அருந்த பரிந்துரைக்கப்படுகிறது. இது இரண்டு லீற்றருக்கும் குறைவானது. இருப்பினும், அந்த விதிக்கு தகுந்த அறிவியல் ஆதாரங்கள் இல்லை.

எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பது பற்றி ஏன் தெளிவில்லாத தகவல்கள் அதிகம் உள்ளன?

1945 ஆம் ஆண்டில், தேசிய ஆராய்ச்சி கவுன்சிலின் அமெரிக்க உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம், வயது வந்தவர்கள் பரிந்துரைக்கப்பட்ட ஒவ்வொரு கலோரி உணவிற்கும் ஒரு மில்லி லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அதன்படி, 2,000 கலோரி உணவு உட்கொள்ளும் பெண்கள் இரண்டு லிட்டர் தண்ணீரையும் 2,500



கலோரிகளை எடுத்துக்கொள்ளும் ஆண்களுக்கு இரண்டரை லீற்றர் தண்ணீரையும் எடுத்துக்கொள்ள வேண்டும். வெறும் தண்ணீர் மட்டுமல்லாமல், பெரும்பாலான பானங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் 98 வீதம் வரை தண்ணீர் கொண்டிருக்கும்.

**ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்?**

சமீபத்திய ஆராய்ச்சியின்படி, ஒரு நாளைக்கு எட்டு டம்ளர் அல்லது சுமார் இரண்டு லீற்றர் தண்ணீர் என்பதே, நம் உடலுக்குத் தேவையான நீர்ச்சத்து கிடைப்பதற்கு அதிகமான அளவாகும். எனவே, நீங்கள் ஒரு நாளைக்கு 1.5 முதல் 1.8 லீற்றர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும்.

8x8 விதியையோ அல்லது 8 டம்ளர் தண்ணீர் என்ற அளவையோ பின்பற்றுவதற்குப் பதிலாக, வெப்பநிலை மற்றும் உடலுழைப்புக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம். வெப்பமான மற்றும் ஈரப்பதமான சூழல்களிலும், அதிக உயரத்திலும் வசிப்பவர்கள், விளையாட்டு வீரர்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள், மற்றவர்களை விட அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

1974 ஆம் ஆண்டில், ஊட்டச்சத்து நிபுணர்களான மார்கரெட் மெக்வில்லியம்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஸ்டேர் ஆகியோர் இணைந்து எழுதிய ஹநியூட்ரிஷன் ஃபார் குட் ஹெல்த்ஹ புத்தகத்தில், வயது வந்தோர் ஒரு நாளைக்கு ஆறு முதல் எட்டு டம்ளர் தண்ணீரை அருந்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில் பழங்கள் மற்றும் காய்கறிகள், காஃபி, குளிர்பானங்கள், பீர் உள்ளிட்டவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**நீர்ச் சத்தின் அறிவியல்**

நீர் நிச்சயமாக முக்கியமானது. நமது உடல் எடையில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர் உள்ளது. தண்ணீரில் ஊட்டச்சத்து உள்ளது. நமது வெப்பநிலையை ஒழுங்குபடுத்துகிறது. நமது உடலுக்குள் நடக்கும் பெரும்பாலான ரசாயன எதிர்வினைகளில் நீர் பங்கு வகிக்கிறது.

வியர்வை, சிறுநீர் மற்றும் சுவாசம் மூலம் நாம் தொடர்ந்து உடலில் இருந்து நீரை வெளியேற்றி வருகிறோம். போதுமான தண்ணீர் அருந்துவதை உறுதி செய்வது உடலின் சமநிலைக்கு முக்கியம். இதனால், நீரிழப்பு ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது. நம் உடலில் உள்ள நீரில் 1-2 வீதம் அளவுக்கான நீரை இழக்கும்போது, நீரிழப்புக்கான அறிகுறிகள் நமக்கு தென்படும். மீண்டும் நாம் நீர்ச்சத்தை பெறும் வரை இந்த அறிகுறிகள் மோசமடையும். அரிதான சந்தர்ப்பங்களில், இத்தகைய நீரிழப்பு ஆபத்தானது.

பல ஆண்டுகளாக 8x8 விதி குறித்த கூற்றுகள், தாகம் எடுப்பதே நாம் நீரிழப்பு ஆபத்தில் இருக்கிறோம் என நம்புவதற்கு வழிவகுத்தது. ஆனால், நம் உடலுக்கு எந்தளவு தண்ணீர் வேண்டும் என உடல் சமிக்ஞை செய்கிறதோ, அதைவிட அதிக தண்ணீர் அருந்த தேவையில்லை என்பதை நிபுணர்கள் பெரும்பாலும் ஒப்புக்கொள்கிறார்கள்.

"நம் முன்னோர்கள் கடலில் இருந்து நிலத்தில் வாழ ஆரம்பித்ததிலிருந்தே, போதுமான நீர்ச்சத்தைப் பராமரிக்க ஏராளமான அதிநவீன நுட்பங்களை பரிணாமம் மூலம் பெற்றிருக்கிறோம்," என்கிறார், மாசசூசெட்ஸில் உள்ள டஃப்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் மூத்த நரம்பியல் விஞ்ஞானி இர்வின் ரோசன்பர்க்.

நமது உடல் நீர்ச்சத்தை இழக்கும்போது அதனை மூளை கண்டறிந்து, தாகத்தைத் தூண்டுகிறது. இதனால்

(14ஆம் பக்கம் பார்க்க)

---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**செல்வா கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** உயிர்த்த ஞாயிறு தினப்பயங்கரவாதத் தாக்குதல்களை யார் நடத்தியது என்ற உண்மையை இன்னமும் எவரும் கூறவில்லை. ஆனால், அந்தத் தாக்குதல்களை நடத்தியது யார் என்பது எனக்குத் தெரியும் என்று அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டபோது ஜனாதிபதியாக இருந்தவரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளாரே? ஜனாதிபதியாக இருந்தபோது அவர் ஏன் அவர்களைக் கைதுசெய்யாமல் இருந்தார் என்று நினைக்கிறீர்கள்?.

**வியுக்தியார்:** நான் நினைக்கிறேன் அவருக்கு இப்போதுதான் அது தெரிய வந்திருக்கின்றது என்று. தாக்குதல்களை நடாத்தியவர்கள் எல்லோரும் அந்த அந்தத் தாக்குதல்களிலேயே பலியாகிவிட்டனர் என்ற விசயம் மனுசனுக்கு இப்போதுதான் தெரிந்திருக்கின்றது போலும். ஆனால் நமது கர்தினால் உட்பட எல்லோரும் தாக்குதலுக்கு திட்டமிட்டவர்கள், பின்னணியில் இருந்தவர்களைத்தான் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதிகம் ஏன்? தாக்குதலை அப்போது ஜனாதிபதியாக இருந்த இவர் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று இவருக்கு உயர்நீதிமன்றம் பதினைந்து கோடி அபராதம் விதித்தபோது கூட அவர் வாய்திறக்கவில்லையே. இப்போது சொல்வதைப் பார்க்கின்றபோது மனுசனுக்கு இப்போதுதான் விசயம் தெரியவந்திருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

---

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** 'எந்த இனத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் காணி உரிமை கிடைக்க வேண்டும். அதற்காகவே 'உறுமய" வேலைத்திட்டம் அண்மையில் தம்புளையில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஒரு சிலருக்கு மாத்திரம் அதன் பலன் கிடைத்திருந்தாலும், ஜூன் மாதமளவில் அந்த வேலைத் திட்டத்தை முழுமையாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்" - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளராரே. அப்போ, ஒரு துண்டுக்காணி கூட இல்லாத எனக்கும் கிடைக்குமா?

**வியுக்தியார்:** அவர் எப்போதும் இப்படித்தானே அறிவிப்புக்களைச் செய்கின்றார். ஜனாதிபதி கதிரையில் அமர்ந்ததும், அடுத்த சுதந்திரதினத்திற்குள் வடக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவேன் என்று அறிவித்தது ஞாபகம் இல்லையா உங்களுக்கு? நமது பூர்விக நிலமான மணலாறில் சிங்கள மக்களுக்கு காணி உரிமத்தை வழங்குகின்றபோதும், அதனையும் நமது யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கியதன் மூலம் அவர் நமக்கு ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். அதாவது மணலாறில் குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் அனைவருக்கும் ஜூன் மாத்திற்குள் காணி உறுதி வழங்கவிருக்கிறாரோ தெரியவில்லையே. அதைத்தான் அவர் அனைவருக்கும் என்று சொல்லியிருப்பாரோ?

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கையில் 85 வீதமான மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை என வெரிட்டிரிசேர்ச் இன்ஸ்ரிரியூட் நிறுவனம் தெரிவித்துள்ளதே. இதுபற்றி எனக்கு எதுவும் புரியவில்லையே உங்களுக்காவது புரிகின்றதா? நான் இந்த 85 வீதத்தில் வருகிறேனா? அல்லது மிகுதியாகவுள்ள 15 வீதத்திற்குள் வருகிறேனா என்று எப்படி அறிவது?

**வியுக்தியார்:** இதுபோன்ற கருத்துக் கணிப்புக்களை செய்பவர்கள் நாட்டிலுள்ள அத்தனை பேரிடமும் கருத்துக்கணிப்பை நடாத்துவதில்லையே. ஒரு பானை சேறுக்கு ஒரு சோறு பதம் என்பது போலத்தான் அவர்களும் ஒரு ஆயிரம் பேரையோ அல்லது இரண்டாயிரம் பேரையோ சந்தித்து கருத்தைக் கேட்டுவிட்டுத்தான் இதுபோன்ற தகவல்களை வெளியிடுகிறார்கள். அதிலும் பலர் தமக்கு வேண்டிய தகவல்களை வெளியிடுகிறார்கள். பெரும்பாலும் இதுபோன்ற கருத்துக்கணிப்புக்களை நடாத்துபவர்கள் மேலை நாடுகளின் நிதி உதவியில் இயங்கும் என்ஜிஓக்கள்தானே.

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** வெடுக்குநாறி மலையில் கோயில்கள் எதுவும் கிடையாது. வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமை இடங்களில் முறையற்ற வகையில் செயல்படுபவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவார்கள் - என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளாரே கவனித்தீர்களா?

**வியுக்தியார்:** வெடுக்குநாறி மலையில் கோவில்கள் எதுவும் கிடையாது என்கிறார். அவர் சொல்வதும் உண்மையானதுதானே. இருந்த கோவிலைத்தான் தரைமட்டமாகிவிட்டார்களே. இப்போது மலையில் வெறும் சிவலிங்கம்தானே இருக்கிறது. அது சரி பௌத்த மரபுரிமை இடம் அது என்கிறாரே, அப்படியெனில் அதில் பௌத்த விகாரையாவது இருந்திருக்கவேண்டும் அல்லவா? தொல்பொருள் இடம் என்றால், அது அப்படியே, அதனை இருந்தது இருந்ததுபோலவே பாதுகாப்பதுதானே தொல்பொருள் திணைக்களத்தின் வேலை. அப்படியெனில் எப்படி குருந்தூர்மலையில் விகாரை கட்ட தொல்பொருள் திணைக்களம் அனுமதியளித்தது என்பதையும் அல்லவா அவர் சொல்லவேண்டும்.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு விவகாரத்தில் சுமுகமான தீர்வை எட்டுவதற்கு சுமந்திரன், சிறீதரன் இணக்கம் எட்டியுள்ளனர் என்றும் இதன் மூலம், அந்தக் கட்சிக்கு எதிரான வழக்கு விரைவாக நிறைவுக்கு வரும் என்று கருதப்படுகின்றது என்றும் ஈழநாடு தலைப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்ததே. அப்படி நடக்கும் என்று நீங்களும் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** அந்தத் தலைப்புச் செய்தியை நானும் பார்த்தேன். தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கில் இவர்கள் இருவருமே எதிராளிகள் தானே. வழக்காளி வேறு ஒருவர் அல்லவா?. அப்படியிருக்கையில் இவர்கள் இருவரும் சேர்ந்து எப்படி வழக்கை சுமூகமாகத் தீர்த்து வைப்பது? அப்படியெனில் இவர்களில் ஒருவர் வழக்காளியாக அல்லவா இருக்கவேண்டும். அந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறுகின்றவர்கள் பின்னர் வழக்கை சமாதானமாக முடித்து வைக்கவும் முயல்வதுதான் எனக்கு புரியவில்லை.

# இரு தேசமான ஒரு நாடு : சைப்ரஸ்

# துருக்கி - கிரேக்க ஆட்சியில் ஓர் தீவு!

**தற்போது காசா போர் தீவிரமாகிய நிலையில் இன்னமும் பாலஸ்தீன - இஸ்ரேல் இரு தேச தீர்வு பற்றி அடிக்கடி சர்வதேச உயர் அரசியல் மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது. இரு தேச தீர்வாகிய சைப்ரஸ் பற்றிய சிறிய அலசலே இக்கட்டுரை**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

துருக்கி - கிரேக்க ஆட்சியில் கீழ் பிரிக்கப்பட்ட சைப்ரஸ் நாட்டின் இரண்டு-அரசுத் தீர்வு (Two-State Solution) என்ற தீர்வானது தமிழ் மக்களது அரசியல் பெருவெளியில் முனைப்புப் பெற்ற விடயமாகும்.

ஒரு நாடு இரு தேசங்கள் என்கின்ற கருத்தியல் பற்றி பரவலாக உலகில் பிரிந்து போகும் நாடுகளிடையே பேசப்பட்டு வருகின்ற அரசியலாகும்.

சைப்ரஸ் பிரிவினை 1974 ஆண்டு துருக்கிப் படைகளின் ஆக்கிரமிப்பிற்கு முன்னரே ஆரம்பமாகியது. மக்களில் மூன்றில் ஒரு பகுதியினரான கிரேக்கர்களும், துருக்கியர்களும் தங்களது சொந்த வீடுகளிலிருந்து வெளியேறிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அக்காலத்தில் ஏற்பட்டது.

**சைப்ரஸ் பிரிவினை வரலாறு**


சைப்ரஸ் தீவில் வாழ்ந்து வந்த கிரேக்கப் பெரும்பான்மையினரும் துருக்கிய சிறுபான்மையினரும் இரண்டு 'இனச்சுத்திகரிப்பு' செய்யப்பட்ட பகுதிகளில் பிரிக்கப்பட்டனர்.

1974 யூலை 22 இல் ஐக்கிய நாடுகள் அவை இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு போர் நிறுத்தத்தை கொண்டு வந்தது. துருக்கிப் படை சைப்பிரசில் நிலைகொள்ள அனுமதிக்கப்பட்டது.

அதே ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கிரேக்க ஆயர் மாகாறியோஸ் மீண்டும் ஆட்சித் தலைவராகப் பதவி ஏற்றார். அடுத்த ஆண்டு சைப்ரஸ் தீவு கிரேக்கர் பகுதி துருக்கியர் பகுதி என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இடையில் ஐக்கிய நாட்டு அவையின் அமைதிப் படை நிறுத்தப்பட்டது.

அதன்பின்னர் 1983 நவெம்பர் 15 இல் துருக்கி சைப்ரஸ் 'வட துருக்கி குடியரசு' எனத் தன்னை ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தியது. ஆனால் ஐநா பாதுகாப்பு அவை அதனை அங்கீகரிக்க மறுத்தது. துருக்கி மட்டும் அதனை அங்கீகரித்தது.

இரண்டு சைப்பிரசையும் இணைப்பதற்கு ஐநா நடத்திய பேச்சு வார்த்தை வெற்றிபெறவில்லை. 2002 இல் கிரேக்க சைப்ரஸ் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்து




கொண்டது குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும்.

**ஐரோப்பிய ஒன்றிய நாடாக**

2003இல் பல்லாயிரக்கணக்கான வட சைப்ரஸில் வாழும் துருக்கி இனமக்கள், சைப்ரஸ் தீவின் கிரேக்கப் பகுதியுடன் தம்மை இணைக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய யூனியனில் சேர்க்கப்படவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வடக்கு சைப்ரஸ் துருக்கிய குடியரசு தலைமைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. சைப்ரஸ் பிரிவினை முடிவிற்கு கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்த யோசனையை துருக்கி மட்டுமே இதனை அங்கீகரித்துள்ளது.

அப்போது நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 50,000 முதல் 70,000 வரை பொதுமக்கள் கலந்துகொண்டனர். இது தீவின் துருக்கிய பகுதிகளில் வாழும் மக்களில் இதில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

இவ் எண்ணிக்கையானது சைப்ரஸின் வடக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த துருக்கி தேசிய உணர்வு தனது ஆதரவு முழுவதையும் இழந்து விட்டது என்பதை காட்டியது.

இதன் பின்னர் சைப்ரசு குடியரசு மே 1, 2004இல்




இருந்து இது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக இருந்து வருகிறது. இதன் அதிகாரபூர்வ பெயர் சைப்ரசு குடியரசு என்பதாகும்.

**கிரேக்க காலனி நாடாக**

மத்திய தரைக்கடலில் காணப்படும் மூன்றாவது பெரிய தீவு சைப்ரஸ். சைப்ரஸ் என்றால் கிரேக்க மொழியில் செப்பு என்று பொருள். சைப்ரஸ் துருக்கியின் தென்திசை கடலோரமாகவும் சிரியாவின் மேற்குக் கரையோரமாகவும் இருக்கிறது.

சைப்ரஸ் பலநூற்றாண்டு காலமாக சைப்ரஸ் தீவு பினீசியன்ஸ் மற்றும் கிரேக்கர்கள் ஆகியோரது காலனி நாடாக இருந்து வந்தது. 1571 ஆம் ஆண்டு துருக்கி அதனைத் தாக்கிக் கைப்பற்றியது. அங்கு பெருவாரி




யான துருக்கியரைக் குடியேற்றி தனது காலனி நாடாக வைத்துக் கொண்டது.

முதலாவது உலகப் போர் வெடித்தபோது பிரித்தானியா சைப்ரஸ் தீவைக் கைப்பற்றியது. 1925 இல் சைப்ரஸ் பிரித்தானியாவின் காலனி நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. கிரேக்கத்தைத் தாய்நாடாகக் கருதும் சைபிரசில் வாழ்ந்த கிரேக்க மக்கள் சுதந்திரம் கேட்டுப் போராடினார்கள்.

சைப்ரஸ் தீவு கிரேக்கத்தோடு இணைக்க வேண்டும் என்றும் போராடினார்கள். 1955 இல் சைப்ரஸ் போராளிகளின் தேசிய அமைப்பு பிரித்தானியாவுக்கு எதிராக ஒரு கெரில்லா போரைத் தொடங்கியது.


1958 இல் ஆயர் மாகாறியோஸ் கிரேக்கத்தோடு இணைவதற்குப் பதில் சைப்ரஸ் ஒரு சுதந்திரநாடாக மலரவேண்டும் என்றார்.

இதே சமயம் சைப்ரஸ் துருக்கியர்கள் சைப்ரஸ் தீவு கிரேக்கர் - துருக்கியர் மக்களிடை பிரிக்கப்பட வேண்டும் எனக் கோரினார்கள். சைப்ரஸ் தீவு 1960, ஒகஸ்ட் 16 இல் சுதந்திரம் அடைந்தது. கிரேக்கர்களும் துருக்கியர்களும் இணைந்து ஒரு அரசியல் யாப்பை எழுதிக் கொண்டார்கள்.

ஆயர் மாகாறியோஸ் சைப்ரஸ் தீவின் முதல் ஆட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் வெகு விரைவில் கிரேக்கர்கள் - துருக்கியர் மத்தியில் சண்டை பலமாக தொடங்கியது.

**துருக்கி படை ஆக்கிரமிப்பு:**

கிழக்கு மத்தியதரைக் கடலில் ஒரு மூலோபாய இருப்பிடமாக, பின்னர் அது அசீரியர்கள், எகிப்தியர்




கள் மற்றும் பெர்சியர்களின் பேரரசுகள் உட்பட பல முக்கிய சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து கிமு 333 இல் தீவை அலெக்சாண்டர் தி கிரேட் அலெக்சாண்டர் கைப்பற்றினார். டோலமிக் எகிப்து, கிளாசிக்கல் மற்றும் கிழக்கு ரோமானியப் பேரரசு, ஒரு குறுகிய காலத்திற்கு அரபு கலிபாக்கள், பிரெஞ்சு லுசிக்னன் வம்சம் மற்றும் வெனிசியர்கள் ஆகியோரால் 1571 மற்றும் 1878 க்கு இடையில் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலான ஒட்டோமான் ஆட்சி பின்பற்றப்பட்டது.

1965 இல் ஐக்கிய நாடுகளின் அவையின் அமைதிப் படை இங்கு அனுப்பப்பட்டது. 1974 ஆம் ஆண்டு யூலை 15 ஆம் நாள் ஆயர் மார்க்கோஸ் சைப்ரஸ் தேசிய பாதுகாப்புப் படை நடத்திய புரட்சியில் பதவி கவிழ்க்கப்பட்டார்.

யூலை 20 இல் துருக்கி சைப்ரஸ் தீவில் வாழும் துருக்கியரைக் காப்பாற்றும் தார்மீக உரிமை தனக்கு இருக்கிறது எனக் கூறிக் கொண்டு அதன் மீது படையெடுத்து சைப்பிரசின் வடபகுதியை அண்டிய 37 விழுக்காடு நிலப்பரப்பைக் கைப்பற்றியது.

இதனால் 180,000 கிரேக்கர்கள் வடக்கில் இருந்து தெற்குக்கு ஏதிலிகளாக இடம் பெயர்ந்தார்கள்.

**வடக்கு - தெற்கு சைப்பிரசாக பிளவு**

துருக்கி சைப்ரசு குடியரசின் தோற்றத்தை ஒப்புக் கொண்டது. சைப்ரசு தீவு பிரிக்கவேண்டும் என்ற தனது கொள்கையில் இருந்து பின்வாங்கியது. துருக்கியதும் துருக்கிய சைப்ரசு தலைவர்களின் நோக்கமும் விடுதலை பெற்ற துருக்கிய நாட்டை சைப்ரசின் வடபகுதியில் அமைப்பது என்பதாகும்.

வடக்கு சைப்பிரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளப் படாத ஆனால் நடைமுறையில் ஒரு சுதந்திர நாடு. இது தனது சுதந்திரத்தை 1983 ஆண்டு அறிவித்தது. இந்த அறிவிப்பை துருக்கி மட்டுமே ஏற்றுக்கொண்டது. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஏற்கவில்லை. இந்த பகுதி படைத்துறை, பொருளாதார, அரசியல் வழிகளில் துருக்கியைச் சார்ந்து இருக்கிறது

சைப்ரஸின் துருக்கிப் பகுதி, மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியாகும். விளைச்சல் நிலப்பரப்பு என்று எடுத்துக்கொண்டால் நாட்டின் மொத்த விளைச்சல் பரப்பில் இது மூன்றில் இரண்டு பங்காகும். ஆனால் வாழ்க்கைத் தரத்தில் இரண்டு பகுதிகளுக்கும் இடையில் மிகப்பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றுள்ள கிரேக்க



தென்பகுதிக்கும் சர்வதேச அளவில் விலக்கி வைக்கப்பட்டுள்ள துருக்கி வடக்கிற்கும் இடையில் பொருளாதார நிலை இடைவெளி விரிவாகிக்கொண்டே போகிறது. இந்த இடைவெளி வடக்கின் துருக்கியின மக்களை வெகுவாகப் பாதிக்கிறது. தெற்கில் தனிநபர் வருமானம் வடக்கைவிட மூன்று மடங்கு அதிகமாகும்.

1970கள் முதல் வடக்கு துருக்கி பகுதியில் வாழும் மக்களில் 10,000 இற்கு மேற்பட்டவர்கள் வெளியேறி சென்றுவிட்டார்கள். கடந்த காலத்தில் துருக்கி வலதுசாரி குடியேற்றவாசிகள் அந்த மக்கள் வெளியேறிய இடங்களில் குடியேறினர்.

தெற்கு சைப்பிரசில் தமது உழைப்பிற்காக பல துருக்கி தொழிலாளர்கள் தினசரி கிரேக்க எல்லையைத் தாண்டி தெற்கு சைபிரஸிற்கு வருகின்றனர்.

சர்வதேச மானியங்கள் மற்றும் சுற்றுலா வளர்ச்சி காரணமாக தெற்குப் பகுதி பொருளாதாரம் மகத்தான வளர்ச்சி கண்டது. ஆனால், வடக்குப் பகுதியில் பண வீக்கமும், பண மோசடிகளும் அதிகரித்தன. துருக்கி மக்கள் வறுமையில் மூழ்கினர்.

2004 அண்மையில் ஐரோப்பிய யூனியன் தெற்கு சைபிரசை புதிய உறுப்பினராக ஏற்றுக்கொள்ள முடிவு செய்தது. இந்த முடிவின் மூலம் சைபிரஸ் தீவின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில் நிலவுகின்ற சமூக பாகுபாடுகள் ஆழமாகிவிடும் என்ற அச்சம் தற்போது நிலவுகிறது.

# துப்பாக்கி ரவை, ஹெரோயினுடன் வவுனியாவில் இளைஞன் கைது!

வவுனியா, மார்ச் 24

வவுனியாவில் ரி - 56 ரக ரவைகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செயப்பட்டுள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது செட்டிக்குளம் காந்தி நகர் பகுதியில் ரி-56 துப்பாக்கி ரவைகள் 13 உம், 1005 மில்லிகிராம் ஹெரோ யின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் செட்டிக்குளம் காந்தி நகர் பகுதியை சேர்ந்த 23 வயது டைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

## திருக்கோயிலில்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகவும், இதன்போது சிலர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் புகுந்து அங்கிருந்த வைத்தியர்களை அச்சுறுத்தியதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பிரிவு உறுப்பினர் டாக்டர் அன் பாஸ் பாறூக் தெரிவித்தார். இதை நிரூபிப்பதற்கான சிசிடிவி காட்சிகள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.



இதனால் அந்த வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அதனாலேயே வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

எனவே, “வைத்தியசாலை மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள், வைத்தியர்களை அச்சுறுத்தியவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அழைத்து வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தியவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும், என, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நிபந்தனை விதித்துள்ளனர்,” எனக் கூறும் டாக்டர் அன்பாஸ் அவை நடந்தால் மட்டுமே அங்கு வைத்தியர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக பாடசாலை மாணவர்களை வெளிக்களச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டாம் என கல்வியமைச்சு அறிவித்துள்ள நிலையிலேயே, மேற்படி பாடசாலையில் மரதன் போட்டி நடத்தப்பட்டதாக டாக்டர் அன்பாஸ் சுட்டிக்காட்டினார்.

காலையிலும் இரவு வேளையிலும் கூட, தற்காலத்தில் அதிக வெப்பம் நிலவுவதாகவும் கூறினார். எனவே, கல்வி அமைச்சின் அறிவிப்புக்கு மாற்றாக அந்தப் பாடசாலை நடந்துள்ளதாகவும் அன்பாஸ் குற்றஞ்சாட்டினார்.

அதிக வெப்பம் நாட்டில் நிலவுகின்றமையால் மாணவர்களை வெளிக்களச் செயற்பாடு மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்த வேண்டாம் என்று கடந்த பிப்ரவரி மாதம் 26ஆம் தேதியில் இருந்தே கல்வியமைச்சு பல தடவை அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஒரு நாளைக்கு....



(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும் ஹார்மோன், சிறுநீர் மூலம் தண்ணீரைச் சேமிக்க சிறுநீரகங்களுக்கு சமிக்ஞை செய்கிறது.

“உங்கள் உடல் சொல்வதை நீங்கள் கேட்டால், எப்போது தாகம் எடுக்கிறது என்பதை உங்கள் உடலே தெரிவிக்கும்” என்கிறார், ப்ளென்ஹெய்ம் மற்றும் லண்டன் ட்ரையத்லான்லின் மருத்துவ இயக்குநரும் விளையாட்டு மருத்துவ ஆலோசகருமான கோர்ட்னி கிப்ஸ்.

நம் உடல் சமிக்ஞை செய்யும் அளவை விட அதிக தண்ணீர் குடிப்பதால் வேறு சில நன்மைகளும் உள்ளன என்பதற்கு சிறிய சான்றுகள் உள்ளன.

இருப்பினும், லேசான நீரிழப்பு ஏற்படுவதற்கான ஆரம்ப கட்டங்களைத் தவிர்ப்பது, சில முக்கிய பலன்களை அளிப்பதாக ஆராய்ச்சி கூறுகிறது. எடுத்துக்காட்டாக, லேசான நீரிழப்பைத் தவிர்க்க போதுமான அளவு தண்ணீர் அருந்துவது மூளையின் செயல்பாட்டை அதிகரிக்க உதவுகிறது என்று பல ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

2023-ம் ஆண்டு வெளியான ஆய்வொன்றில், போதுமான நீர்ச்சத்துடன் இருப்பது வயதான தோற்றம் ஏற்படுவதை மெதுவாக்கும் என்றும் இதயம் மற்றும் நுரையீரல் நோய் போன்ற நாள்பட்ட நோய்களைத் தவிர்க்க உதவும் என்றும் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டது.

## தமிழ்நாடு....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கருத்துக்கணிப்பு பாஜக இம்முறை மேற்கு வங்கத்தில் 25 இடங்களிலும், மற்றொரு கருத்துக் கணிப்பு 19 இடங்களிலும் மற்றொன்றில் 20 இடங்களிலும் வெற்றி பெறும் எனத் தெரிவித்துள்ளது. பிபிசியிடம் பேசிய தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோர், மேற்கு வங்கத்தில் பாஜக சிறப்பான இடங்களைப் பெற முடியும் என்று கூறினார்.

அதேநேரம், திரிணாமுல் காங்கிரஸ் 30-35 இடங்களைப் பெறும் என்று அக்கட்சியின் தலைவர் குணால் கோஷ் கூறினார். பாஜகவின் செய்தித் தொடர்பாளர் ஷமிக் பட்டாச்சார்யா, கட்சியின் இலக்கு 35 தொகுதிகள் என்று கூறியுள்ளார். சமூக அறிவியல் ஆய்வு மையத்துடன் தொடர்புடைய அரசியல் ஆய்வாளர் மதுல் இஸ்லாம், “பாஜக தனது நிலையை வலுப்படுத்தும் என்று நினைக்கவில்லை” எனத் தெரிவித்தார்.

‘இந்தியா’ கூட்டணியில் இருந்து பிரிந்து 42 தொகுதிகளிலும் தேர்தலில் போட்டியிடும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு சவாலாக இருப்பது, பிரதமர் மோதியை தனியாளாகத் தடுத்து நிறுத்த முடியும் என்பதை விமர்சகர்களுக்குக் காட்டுவதுதான்.

இது நடந்தால், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்கள் மத்தியில் மமதா பானர்ஜியின் அந்தஸ்து உயரும். ஆனால், இது நடக்கவில்லை என்றால், மேலும் பல தலைவர்கள் கட்சியை விட்டுச் செல்வார்கள் என்ற பேச்சும், அடுத்த சட்டமன்றத் தேர்தலில் கட்சியின் செயல்பாடு குறித்து கேள்வி எழும் அச்சமும் உள்ளது.

அரசு கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில், அனுப்ரதா மண்டல், பார்த்தா சாட்டர்ஜி போன்ற தலைவர்கள் சிறையில் உள்ளனர். இறுதியில் என்ன நடக்கும் என்று சொல்வது கடினம்.

ஆனால், மேற்கு வங்கத்தில் வெற்றி பெற பாஜக தன்னால் இயன்றவரை முயற்சி செய்து வருகிறது. மேற்கு வங்கத்தில் பிரதமர் மோதி, அமித் ஷா நடத்தும் கூட்டங்கள், திரிணாமுல் காங்கிரஸின் மூத்த தலைவர்கள் பாஜகவுக்கு செல்லுதல், பாஜகவின் விளம்பரம் உள்ளிட்டவற்றை பாஜக மேற்கொண்டு வருகிறது.

மேலும், வட இந்தியாவில் அரசியல் உச்சத்தை எட்டியுள்ள பாஜகவுக்கு மேற்கு வங்கம் எவ்வளவு முக்கியம் என்பது தெரியும். எனவே, பாஜக இங்கு சிறப்பாகச் செயல்படுவது முக்கியம். ஆனால், பாஜகவுக்கு இருக்கும் சவால்கள் குறைந்தபாடில்லை.

# தேர்தல் பற்றிய...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனிடமே சிறந்த ஜனாதிபதி வேட்பாளர் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த கருத்துக்கள் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து செயற்படுவதே இரு தரப்பினருக்கும் பயனுடையதாக இருக்கும் என்று அவர் நம்புகிறார் என்பதன் வெளிப்பாடாகும். ஆனால், அதேவேளை, பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெரிய வெற்றிபெற்றுவிடக் கூடாது என்பதற்காக முதலில் அந்த தேர்தல் நடத்தப்படவேண்டும் எனபதும் அவரது விருப்பமாக இருக்கிறது. சூழ்நிலைகள் எல்லாமே எல்லாக் காலத்திலும் தங்களது நலன்களுக்கு வசதியானதாக இருக்க வேண்டும் என்று விரும்புவது ராஜபக்சாக்களின் சுபாவம்.

தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றால் எந்த அரசியல் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைப்பது சாத்தியமில்லை என்றே பெரும்பாலான அண்மைய கருத்துக் கணிப்புக்கள் கூறியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் ஆறு மாதங்களே இருக்கும் நிலையில், பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான யோசனை ஒன்றுக்கு அமைச்சரவை கடந்த வாரம் அங்கீகாரம் வழங்கியிருப்பது சந்தேகத்தை கிளப்பியிருக்கிறது.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானம் குறித்து வெளியான செய்திகளின் பிரகாரம் 160 பாராளுமன்ற உறுப்பினர்களை பழைய தொகுதி அடிப்படையிலும் மிகுதி 65 உறுப்பினர்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப் படையிலும் தெரிவு செய்வதற்கு சட்டங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன.

இதே போன்ற யோசனையை கடந்த வருடம் நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச அமைச்சரவைக்கு சமர்ப்பித்ததாக கூறப்பட்டது. தேர்தல் சீர்திருத்தங்களுடன் சேர்த்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பில் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தும் யோசனையையும் அரசாங்கம் கொண்டிருக்கிறது என்று வெளியான செய்திகளை விஜேதாச அப்போது மறுத்தார். ஆனால் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான யோசனை மீண்டும் முன்வைக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது பெறப்பட்டிருக்கிறது.

தேர்தல்களுடன் தொடர்புடைய சகல செயன்முறைகளையும் முற்றாக மீளாய்வு செய்து ஆறு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கடந்த வருடம் பிற்பகுதியில் முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசத் டெப் தலைமையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஆணைக்குழு வொன்றை நியமித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற தேர்தல்முறைச் சீர்திருத்த யோசனை தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்று தேர்தல் கண்காணிப்பு சிவில் அமைப்புக்களும் எதிரணி கட்சிகளும் அச்சம் வெளியிட்டிருக்கின்றன.

தேர்தல் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை, தொகுதிகளின் எல்லை நிர்ணயச் செயன்முறைகள் முக்கியமானவை. அந்த செயன்முறைகளுடன் இணைந்த பல்வேறு நடைமுறைகளைக் கையாளுவதற்கு நீண்டகாலம் எடுக்கும். வருடக் கணக்கில் கூட அவை நீடிக்கலாம். அந்த செயன்முறைகள் நிறைவு செய்யப்படும் வரை பாராளுமன்ற தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2017 ஆம் ஆண்டில் மாகாணசபை தேர்தல்களையும் கலப்பு தேர்தல் முறையில் நடத்துவதற்கு சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து எல்லை நிர்ணயச் செயன்முறைகளில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக பல வருடங்களாக மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கின்றன.

அதனால், தேர்தல்களை ஒத்திவைக்கும் ஒரு தந்திரோபாயமாகவே பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களைச் செய்யும் முயற்சிகளில் அரசாங்கம் இறங்குகிறது என்ற சந்தேகம் நியாயமானது.

அதனால், எல்லை நிர்ணயச் செயன்முறைகள் நீண்டகாலம் நீடிக்கும் பட்சத்தில் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பாராளுமன்ற தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நேரத்தில் நடத்துவதற்கு வகைசெய்யக்கூடியதாக விசேட ஏற்பாட்டை தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான சட்டமூல வரைவில் உள்ளடக்கவேண்டும் என்று “ சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை (பவ்ரல்) அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி முன்வைத்திருக்கும் கோரிக்கை வரவேற்கத்தக்கதாகும்.

தேர்தல் சீர்திருத்தங்கள் விடயத்தில் மக்களுக்கு இருக்கும் சந்தேகத்தை தெளிவுபடுத்தவேண்டியது ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் கடமையாகும்.

மக்கள் மத்தியில் செல்வதற்கு பயந்து உள்ளூராட்சி தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்திவைத்த அரசாங்கம் தேசிய தேர்தல்களையும் ஒத்திவைப்பதற்கு எந்த நேரத்திலும் எதையும் செய்யலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுவடைந்திருக்கிறது.

## உயிருக்கு....

ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன் பின்னணியிலேயே, தனக்கும் தன் குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும் தமக்கு பாதுகாப்பு வழங்கும் பட்சத்தில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் உண் மைகளை வெளியிடுவேன் எனவும் நேற்று அவர் மீண்டும் கூறியுள்ளார். (அ)

## காத்துக்கொண்டி....

ராஜக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து பாரதூரமானது. குண்டுத்தாக்குதல் தொடர்பில் அவ ருக்கு ஏதும் தெரிந்திருந்தால் அதனை அவர் பகிரங்கப்படுத்தவேண்டும். நீதிமன்றம் அழைப்பு விடுக்கும் வரை காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவ சியமில்லை. உண்மை தெரிந்திருந்தும் அதனை மறைப்பதும் குற்றமாக கருதப் படும் - என்றார். (அ)

## மைத்திரிக்கு....

ஜயவர்த்தன குற்றப் புலனாய்வு திணைக் களத்துக்கு முறைப்பாடளித்துள்ளார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட அவர்-

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்க ளின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் தமக்கு தெரியும் என முன் னாள் ஜனாதிபதி கூறியிருக்கும் கருத்து பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, உடனடியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கைது செய்யப்பட்டு, உண்மைகள் வெளிப் படுத்தப்பட வேண்டும் - என்றார். (அ)

## மைத்திரிபாலவின்...

எனவும், நீதிமன்றம் உத்தரவிட்டால் அதனை வெளிப்படுத்துவதற்கு தயார் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

அவரின் அறிவிப்பு தெற்கு அரசிய லில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது. இந்நிலையில் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவை கைது செய்து விசாரணைகளை நடத்துமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## குற்றவியல்....

கடந்த சில வருடங்களாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய, குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க அமைச்சுக்கு பரிந்துரைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், நீதிபதியி னால் தண்டணை உத்தரவை பிறப்பிக் கும் வகையில், தண்டனை கோவையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டதாக நீதி அமைச் சர் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

எனினும், சட்டமூலம் சமர்ப்பிக்கப் பட்டதும் அதனை இரத்து செய்யுமாறு சிவில் அமைப்புகளும் மகளிர் அமைப்பு கள் சிலவும் கோரிக்கைகளை முன்வைத் ததாக நீதி அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

அத்தகைய தரப்பினருக்கு மறுசீர மைப்பு தொடர்பில் கலந்துரையாட லுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள் ளதாகவும் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கலந்துரையாடலுக்கு பிறகு திருத்தம் அவசியமா, எவ்வாறான திருத்தம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள் ளப்படும் என அவர் கூறினார். (அ)

# ரஷ்யாவில் தாக்குதல்; இலங்கை கண்டனம்!

கொழும்பு, மார்ச் 24

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் புற நகர் பகுதியில் உள்ள அரங்கம் ஒன்றில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குத லுக்கு இலங்கை கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட் டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு எதிரான இத்த கைய வன்முறை வெறுக்கத்தக்கது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் தண்டிக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைதி மற்றும் பாதுகாப்புக்கான பாரிய அச்சுறுத்தலை எதிர்கொள்ள சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைக்க தயாராக உள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ரஷ்யாவில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் இலங்கையர்கள் எவரும் பாதிப்படைய வில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மொஸ்கோவிலுள்ள இலங்கையின் தூதரகம் இதனை தங்களுக்கு உறுதி படுத்தியுள்ளதுடன், எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் பொது ஒன்று கூடல்களை தவிர்க்குமாறும் அங்குள்ள இலங்கையர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரி வித்துள்ளது. (அ)

## ரெலோ....

அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட் டதுடன் செயலாளராக கோவிந்தன் கருணாகரம்(ஜனா), தேசிய அமைப்பாள ராக பிரசன்னா இந்திரகுமார், நிதிச் செயலாளராக சுரேன் குருசாமி, நிர்வா கச் செயலாளராக விந்தன் கனகரத்தினம், இளைஞரணி செயலாளராக செந்தில் நாதன் மயூரன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை ரெலோவின் 11ஆவது தேசிய மாநாடு இன்று காலை வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மைத்திரிபாலவை....

குறிப்பிட்டுள்ள தகவல்களால் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி யுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் அரசியல் இறையாண் மைக்கு மாபெரும் பங்கம் ஏற்பட்டுள் ளது.

அவர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் உண்மை எனில், குற்றச் செயலையும், குற்றவாளிகளையும் மறைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடன் கைதுசெய்யப்பட வேண்டும்.

அத்துடன் அவரிடம் சரியான முறை யில் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு உரிய சூத்திரதாரிகளுக்கு கடுமை யான தண்டனையை வழங்க வேண்டும் - என் றார். (அ)

## ராஜபக்ஷக்....

பதவிகளைத் தந்து ஒதுங்கி நின்றார்கள்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்தார்.

"தற்போதைய அரசுக்கு ராஜபக்ஷக் கள் பூரண ஆதரவை வழங்குகின்றார் கள். இதனை நான் வரவேற்கின்றேன். இந்த அரசுக்குள் எந்தவித முரண் பாடுகளும் இல்லை.

அரசியல் இலாபம் கருதி சில ஊடகங்கள் வெளியிடும் பொய்யான செய்திகளை எமது மக்கள் நம்பமாட் டார்கள் என்று நான் நினைக்கின்றேன்."

- என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெறும். அந்தத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நான் இன்னமும் முடிவு எடுக்கவில்லை. என்னைப் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறும் சிலர் பரிந்துரைத் துள்ளனர்.

அதேவேளை, மொட்டுக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்கு வாரா? இல்லையா? என்பது தொடர் பில் என்னால் பதில் கூற முடியாது. அது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைமையிடம்தான் கேட்க வேண்டும்.

நெருக்கடியான கால கட்டத்திலும் இந்நாட்டு மக்களுக்காக நான் பணி யாற்றுகின்றேன். பலரும் எனக்கு ஆதரவு வழங்குகின்றார்கள். அந்த ஆதரவு தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

நாடு மெல்ல மெல்ல மீண்டெழுந்து வருகின்றது. எனவே, எதிரணியினரும் கட்சி வேறுபாடுகளைக் களைந்து அரசின் வேலைத்திட்டத்தில் ஒன்றி ணைய வேண்டும்-என்றார். (அ)

## ரஷ்யத் தலைநகரில்....

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நகரின் மத்திய பகுதியில் உள்ள பிரம் மாண்ட இசைக்கச்சேரி அரங்கிற்குள் நேற்று வெள்ளிக்கிழமை இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது.

இதன்போது, அங்கு நுழைந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் கண் மூடித்தனமாக சுட்டனர். மேலும் அரங் கிற்குள் வெடிகுண்டுகளையும் வீசிய தால், அந்த பகுதி முழுவதும் தீப்பிடித்து எரிந்தது.

இந்த தாக்குதலில் தற்போது வரை 143 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளதுடன், 145 இற்கும் அதிகமா னோர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எந்த ஒரு பகிரங்க அறிவிப்பையும் வெளியிடவில்லை.

இந்த சம்பவத்தை பயங்கரவாதச் செயல் என ரஷ்ய அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியும் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவருமான டிமித்ரி மெத்வதேவ் துப்பாக்கிதாரிக ளைக் கொல்ல உத்தரவிட்டதுடன், இந்த தாக்குதலுடன் உக்ரைன் அதிகாரி கள் தொடர்புபட்டிருந்தால், அவர்கை ளத் தேடி அறிந்து ரஷ்யா கொலை செய் யுமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த சம்பத்துடன் தமக்கு தொடர்பில்லை என உக்ரைன் அறிவித்துள்ளது.

இதேவேளை, மொஸ்கோவில் உள்ள விமான நிலையங்கள், ரயில் நிலையங் கள் உள்ளிட்ட பிரதான இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.


அத்துடன், ரஷ்யாவில் இந்த வார இறுதியில் பாரிய நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, 2004 ஆம் ஆண்டு பெஸ்லானில் உள்ள பாடசாலையில் நடத்தப்பட்ட தாக்குதலில் சிறுவர்கள் உள்ளிட்ட 330 பேர் உயிரிழந்தனர்.

அதற்கு பிறகு பொதுமக்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதலாக இந்த சம்பவம் பதி வாகியுள்ளது.

அத்துடன், இந்த தாக்குதலில் இலங்கை பிரஜைகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டதாக இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை என இலங்கை வெளி விவகார அமைச்சு குறிப்பிட்டது. (அ)



ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு மைத்திரியும் ஒத்துழைப்பா?

## கேள்வி எழுப்புகிறார் பிள்ளையான்



மட்டக்களப்பு, மார்ச் 24

**முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன உயிர்த ஞாயிறு குண்டுவெடிப்பிற்கு அவர் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு. எனவே அவர் துணிந்த - நேர்மையான அரசியல் தலைவராக இருந்தால் குண்டுவெடிப்பு சூத்திரதாரி யார் என்பதை விரைவாக ஊடகங்களில் வெளிப்படுத்த வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை - இனமத நல்லிணக்க அறிதலும் புரிதலும் எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை அஞ்சனா மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடாத்தியவர்களை தெரியும் என தெரிவித்த கருத்தை நான் ஊடகங்களில் பார்த்தேன். ஒரு சாதாரண மனிதனைபோல முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேசுகின்றார். இந்த குண்டு வெடிப்பு இடம்பெறுகின்ற போது அவர் நாட்டின் தலைவராக இருந்தார். தலைவருடைய பொறுப்பு யாராக இருந்தாலும் தேடி கண்டு பிடித்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கவேண்டும்.

ஆனால் அவர் அதைவிட்டு விட்டு இப்போது இரகசிய வாக்கு மூலம் கொடுக்க வேண்டும் என கருத்துக்களை சொல்லுகின்றார். எனவே ஒரு வேடிக்கையான மனிதரை இந்த நாட்டு அரசியலுக்கு கொண்டு வந்துள்ளோம் என்பதையிட்டு நாங்கள் வெட்கப்படவேண்டும்.

ஏன் அவர் இரகசிய வாக்கு மூலம் தேவை என்கின்றார்? யாருக்கு அச்சப்படுகின்றார்? அப்படியென்றால் இந்த குண்டு வெடிப்புக்கும் அவரும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு.

ஆகவே அவர் ஒரு துணிந்த நேர்மையான அரசியல் தலைவராக இருந்தால் யார் என்பதை வெளிப்படையாக விரைவாக ஊடகங்களில் வெளிப்படுத்தவேண்டும்-என்றார். (அ)

# பால் மா விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 24

எதிர்வரும் ரமழான் மற்றும் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நேற்று முதல் ஒரு கிலோகிராம் பால் மா விலை 150 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்

இதேவேளை ,புறக்கோட்டை மொத்த சந்தையில் ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் மொத்த விலை 20 முதல் 25 ரூபா வரையில் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் 255 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் மொத்த விற்பனை விலை தற்போது 275 ரூபா விலிருந்து 280 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. (அ)

# யாழில் பால் புரைக்கேறி 28 நாள் சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

பால் புரைக்கேறியதில் 28 நாள் சிசுவொன்று யாழில் உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சசிக்குமார் பிரதீபா எனும் சிசுவே உயிரிழந்துள்ளது.

தயார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிசுவுக்கு பால் ஊட்டி விட்டு , குழந்தையை படுக்க வைத்துள்ளார். சிறிது நேரத்தில் குழந்தை அசைவின்றி காணப்படுவதனை அவதானித்து , குழந்தையை எழுப்பியபோது குழந்தை மயக்கமான நிலையில் காணப்பட்டமையால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர். (அ)

# வீதியில் விழுந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தவர் திடீரென வெளியேறிய நிலையில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தலையாழி பகுதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் தினேஷ் என்ற 44 வயதானவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மூச்செடுக்க சிரமென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வேறொரு விடுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே நேற்று முன் தினம் மாலை வைத்தியசாலையின் பின்பக்க நுழைவாயில் ஊடாக தீடிரென வெளியேறி சிறிது நேரத்தில் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

அதிகளவிலான மதுபானப் பாவனை காரணமாக நுரையீரல் பாதிக்கப்பட்ட குறித்த நபரின் உடலில் ஏற்றப்பட்ட கனூலா கழற்றப்பட்ட நிலையில் இரத்த கசிவு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. (அ)

# பிரதமர் சீனாவுக்கு விஜயம்!

கொழும்பு, மார்ச் 24

பிரதமர் தினேஸ் குணவர்தன அடுத்த வாரம் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீன வெளிவிவகார அமைச்சை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.


அந்த நாட்டு பிரதமரின் அழைப்பிற்கிணங்க பிரதமர் தினேஸ் குணவர்தன சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரதமர் தினேஸ் குணவர்தன எதிர்வரும் 30ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டு கடனில் சீனா 10 சதவீதத்தை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மலேசிய எம்.பியுடன் பிரதமர் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 24

பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இருநாடுகளுக்குமிடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

அதேபோன்று டட்டுக் சரவணன் மனிதவள அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இலங்கையர்கள் மலேசியாவில் பணிப்புறிவதற்கான 0ஆயிரம் வேலைவாய்ப்பு வீசாவிற்கான ஒதுக்கீட்டுக்கு அனுமதியை வழங்கியுள்ளார்.

அதற்காக பிரதமர் நன்றிகளை தெரிவித்துள்ளதுடன், இந்த நடவடிக்கைக்கு தொடர் முயற்சிகளை மேற்கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தன பாராட்டுக்களை தெரிவித்தார்.

தற்போது இவ் ஒதுக்கீட்டினை இலங்கையை சேர்ந்த 1853 இளைஞர், யுவதிகள் பயன்படுத்தியுள்ளனர்.

மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் கருத்து தெரிவிக்கையில்- இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார விழ்ச்சியில் இருந்து, இலங்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் சிறந்த நிர்வாகத்திறன் ஊடாக மிக விரைவாக இலங்கையை மீட்டெடுத்தனர். ஏனைய நாடுகள் இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் மீண்டெழ கையாண்ட அனுகுமுறைக்கு பாராட்டுக்களை தெரிவித்தது. அத்துடன் இலங்கைக்கு எந்த நேரத்திலும் மலேசிய அரசாங்கம் உதவுவதற்கு காத்திருக்கிறது - என்றார். (அ)

# விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் பலி!

கொழும்பு, மார்ச் 24

புத்தளம் - கொட்டுக்கச்சிய , கல்லகுளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் பலத்த காயங்களுடன் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைமடு, வேம்புவெவ பகுதியைச் சேர்ந்த ஆர்.எம். குசுமலதா மல்காந்தி (வயது 43) எனும் மூன்று பிள்ளைகளின் தாயே விபத்தில் உயிரிழந்துள்ளார் என்றும் புத்தளம் தலைமையகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது தந்தையைப் பார்ப்பதற்காக மேற்படி தாய் மூன்று பிள்ளைகளுடன் வருகை தந்த பின், ஆனைமடு வேம்புவெவ கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது ஆனைமடுவில் இருந்து வந்த தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் ஸ்தலத்தி லேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் தாயுடன் பயணித்த இரண்டு பிள்ளைகள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மேலும், இந்த விபத்தின்போது வீதியில் கவிழ்ந்ததில் அந்த லொறியின் சாரதியும் படுகாயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர். இதேவேளை, மோட்டார் சைக்கிளில் போதிய இட வசதி இல்லாத காரணத்தால் மோட்டார் சைக்கிளில் வருகை தந்த தான் புத்தளத்தில் இருந்து ஆனைமடுவுக்குப் பஸ்ஸில் சென்றதாக உயிரிழந்த பெண்ணுடன் வைத்தியசாலைக்கு வந்த மற்றுமொரு மகள் தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சர்க்கரை நோய் பாதங்களைப் பாதிப்பது ஏன்?

எண் சாண் உடம்பையும் தாங்குவது, பாதங்கள். ஆனால், அந்தப் பாதங்களைப் பாரமரிப்பதற்கு நாம் எத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறோம்? யோசித்துப் பாருங்கள். முகத்துக்குத் தருகிற முக்கியத்துவத்தைப் பாதங்களுக்கு நாம் தருவதில்லை என்பதுதான் நிஜம். பாதங்களைப் பராமரிப்பதன் மூலம் பல நோய்களில் இருந்து நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள முடியும். அதிலும் சர்க்கரை நோய் இருப்பவர்களுக்குப் பாதப் பராமரிப்பு என்பது ரொம்ப ரொம்ப அவசியம்.

**என்ன காரணம் தெரியுமா?**

சர்க்கரை நோய் இல்லாதவர்களோடு ஒப்பிடும் போது, சர்க்கரை நோய் இருப்பவர்களுக்குக் கால் பாதிப்பு ஏற்படுகின்ற வாய்ப்பு 15 மடங்கு அதிகம். இன்னும் சொல்லப்போனால், சர்க்கரை நோயாளிகளுக்கு 85 சதவீதக் கால் இழப்புக்குக் காரணம், கால் புண்களே. மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் சர்க்கரை நோயாளிகளில் 20 சதவீதம் பேர் கால் பாதிப்புகளுக்காகவே அனுமதிக்கப்படுகின்றனர். பாத பாதிப்பு ஏற்பட்டவர்களில் 20 - 50 சதவீதத்தினர் அடுத்த 5 ஆண்டுகளில் இதய பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு போன்றவற்றால் உயிரிழக்கின்றனர்.

கால் பாதிப்பு சின்னதாக இருந்தால்கூட, அதைக் குணப்படுத்த அதிக செலவுசெய்ய வேண்டிவரும். அதே வேளையில், இவர்கள் கொஞ்சம் விழிப்புடன் இருந்தால், பாதங்கள் பாதிக்கப்படுவதைச் சுலபத்தில் தடுத்துவிடலாம். இந்த விழிப்புணர்வு வர வேண்டும் என்பதற்காகவே, இந்தியாவில் பெரிய நகரங்களில் பாதங்களைப் பராமரிப்பதற்கென்றே தனி கிளினிக்குகள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன.

**கால் பாதிப்பு - அறிகுறிகள்**

காலில் தொடு உணர்வு, வெப்ப உணர்வு குறைவது. எரிச்சல், மதமதப்பு, ஊசி குத்தும் வலி. கெண்டைக்கால் தசைகளில் குடைச்சல். பாதவெடிப்பு. கால்ஆணி. நகம் நிறம் மாறுவது. தோல் நிறம் மாறுவது. விரல் இடுக்குகளில் புண். கொப்புளம். ஆறாத புண். கால் வீக்கம்.

இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றிரண்டு தெரிந்தால்கூட உடனே மருத்துவரைப் பார்த்து விட்டால் நல்லது.

**கால் பாதிப்பு எப்படி ஏற்படுகிறது**

ரத்தத்தில் அதிக அளவு சர்க்கரை தேங்கும்போது, அந்த அதீத சர்க்கரை 'சார்பிட்டால்' எனும் வேதிப் பொருளாக மாறுகிறது. இது காலில் உள்ள புறநரம்புகளைச் சிறிது சிறிதாக அரிக்கிறது. இதனால், காலில் தொடுஉணர்வு குறையத் தொடங்குகிறது. அப்போது காலில் முள் குத்துவதுகூடத் தெரியாது. பகலில் நடக்கும்போது பஞ்சுமெத்தையில் நடப்பது போன்று இருக்கும். போகப் போக, பாதங்களில் எரிச்சல் ஏற்படும். ஊசி குத்தும் வலி ஆரம்பிக்கும். இந்த நிலைமைக்கு 'டயபடிக் நியூரோபதி' (Diabetic Nueropathy) என்று பெயர். இந்த நிலைமையில், காலில் அல்லது பாதங்களில் சின்னதாகப் புண் வந்தால்கூட அதை உணர முடிவதில்லை.




அடுத்து, இந்த நரம்பு பாதிப்பினால், பாத தசைகள் சுருங்குவதால், பாதத்தில் அழுத்தம் அதிகமாகும். இதனால், 'கால் ஆணி' தோன்றும். புண்கள் ஏற்படும். மேலும், இவர்களுக்குப் பாதங்களில் வியர்வை குறைவாகச் சுரப்பதால், வெடிப்புகள் உண்டாகும். இந்த வெடிப்புகளில் தொற்றுக் கிருமிகள் சுலபத்தில் நுழைந்துவிடும். அப்போது வெடிப்புகளில் சீழ் வைத்துவிடும்.

இவை தவிர, கட்டுப்பாடில்லாத சர்க்கரை நோயாளிகளுக்குக் கால்களுக்குச் செல்லும் ரத்தக் குழாய்களும் பாதிக்கப்படும். இதனால், கால்களுக்கு ரத்த ஓட்டம் குறைந்து, கெண்டைக்கால் தசைகளில் குடைச்சல் ஏற்படும். கால் திசுக்களுக்கு ரத்த ஓட்டம் தடைபடுவதால், காலில் சிறிய அளவில் புண் வந்தால்கூட ஆறுவதற்குத் தாமதம் ஆகும். உயர் ரத்த அழுத்தம் மற்றும் ரத்த மிகைக் கொழுப்பு இருப்பவர்களுக்கு இந்தப் பாதிப்புகள் சீக்கிரமே வந்துவிடும். புகைப்பழக்கம் இருப்பவர்களுக்கு, புகை பிடிக்காதவர்களைவிட 100 மடங்கு அதிகமாக ரத்தக் குழாய் பாதிப்பு ஏற்படுவதால், அவர்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சர்க்கரை நோயாளிகள் காலில் செருப்பு அணியாமல் நடக்கும்போது, முள், கல் போன்றவை குத்துவது தெரியாது. ஏதாவது லேசாக இடித்துவிட்டால்கூட புண்ணாகிவிடும். இது ஆரம்பத்தில் அவர்களுக்குத் தெரியாது. நாளடைவில், புண் பெரிதாகி சீழ் வைத்த பிறகு அல்லது குளிர் காய்ச்சல் வந்தபிறகுதான் தெரியவரும். அது பல சிக்கல்களை உருவாக்கும்.

**சேற்றுப்புண்**

பாதங்களில் நிறைய வியர்வை கொட்டுமானால், 'அத்லெட் ஃபுட்' (Athlete's foot) எனும் நோய் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இது 'டீனியா பீடிஸ்' (Tinea pedis) என்று அழைக்கப்படுகிற நோய். பூஞ்சைக் கிருமி விரல் இடுக்குகளைத் தாக்கி இந்த நோயை ஏற்படுத்துகிறது. சேற்றுப்புண் என்று சொல்கிறோம் அல்லவா? இதுதான் அது. வீட்டு வேலைகளுக்காகத் தண்ணீரில் அதிக நேரம் புழங்கும் பெண்களுக்கும், இறுக்கமான ஷூக்களை நீண்ட நேரம் அணிந்திருப்போருக்கும் விரல் இடுக்குகளில் பூஞ்சை வளரத் தேவையான சூழல் நிலவுகிறது. இதனால் இவர்களுக்குச் சேற்றுப்புண் வருகிறது.

**என்ன பரிசோதனைகள்**

கால்களில் பாதிப்பு இருப்பதை ஆரம்பத்திலேயே தெரிந்துகொள்ள கீழ்க்காணும் பரிசோதனைகள் உதவுகின்றன.

தோலில் தொடு உணர்வு சரியாக இருக்கிறதா என்ப தைக் கண்டறியும் நுண்ணிழைப் பரிசோதனை.

பாதங்களில் நரம்பு பாதிப்பு இருக்கிறதா என்பதை ஆரம்பத்திலேயே தெரிந்துகொள்ள உதவும் 'பயோதிசி யோமெட்ரி' பரிசோதனை.

கால்களுக்கு ரத்த ஓட்டம் சரியாக இருக்கிறதா என் பதை அறிய உதவும் 'டாப்ளர் ஸ்கேன்' பரிசோதனை.

பாதங்களில் அழுத்தம் சரியாக இருக்கிறதா என்பதை அறிய உதவும் 'பீடோபோடோகிராஃப்' பரிசோதனை. இவற்றை ஆண்டுக்கு ஒருமுறையாவது செய்து கொள்ள வேண்டும்.

**பாதப் பராமரிப்பு**

பெரும்பாலான சர்க்கரை நோயாளிகள் தங்கள் கால்பாதப் பராமரிப்பின் அவசியத்தை ஆரம்பத்தில் உணர்வதில்லை. பாதங்களில் புண் அல்லது காயங்கள் வந்தபிறகு அவதிப்படுகின்றனர். இதைத் தவிர்க்க என்ன வழி? தினமும் கால்களைக் கவனியுங்கள். காலையில் எழுந்ததும் அல்லது நடைப்பயிற்சி முடிந்ததும், பாதங்களைப் பரிசோதியுங்கள். கீழ்க்கண்ட அறிகுறிகள் ஏதாவது தெரிகிறதா எனத் தெரிந்து கொள்ளுங்கள்.

சிராய்ப்புகள், காயங்கள், கொப்புளங்கள். வெடிப்புகள், தோல் உரிவது, தோல் சுருங்குவது. தோல் சிவப்பது, தோல் வீக்கம். தோல் நிறமாறுவது, தோல் கருப்பாவது. தோலில் சிறிய சிராய்ப்பானாலும் சரி, சிறிதளவு நிறமாற்றம் தெரிந்தாலும் சரி, உடனே மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்.

**கால் சுத்தம் மிக முக்கியம்**

முகத்தைப் பராமரிப்பது போன்று கால் மற்றும் பாதங்களைத் தினமும் காலை, மாலை இரு வேளை வெதுவெதுப்பான நீரால் சோப்புப் போட்டுக் கழுவி, ஈரம் போகத் துடைத்துச் சுத்தமாக வைத்துக்கொள் ளுங்கள். முக்கியமாக விரல் இடுக்குகளில் சுத்தம் செய்யவும்.

கால்களுக்கு அதிகச் சூடும் ஆகாது அதிக ஈரமும் ஆகாது. சூடு அதிகமானால், தோலில் கொப்புளம் வரும். ஈரம் அதிகமானால், விரல் இடுக்குகளில் பூஞ்சைத் தொற்று வரும். ஆகவே, கவனம் தேவை. முக்கியமாக, காலிலும் பாதத்திலும் சூடாக ஒத்தடம் தராதீர்கள்: வீரியமான தைலங்களைக் தடவாதீர்கள்.

**தோலை ஈரப்படுத்துங்கள்**

சர்க்கரை நோயுள்ளவர்களுக்கு நரம்பு பாதிப்பு ஏற்படுவதால் வியர்ப்பது குறைந்து, தோலில் வறட்சி ஏற்படும். இவ்வாறு வறண்ட தோலில் அரிப்பு, வெடிப்பு ஏற்பட்டுத் தொற்று உண்டாகலாம். இந்த மாதிரி தொந்தரவுகளைத் தவிர்க்க, தோலை அடிக்கடி ஈரப் படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு ஆலிவ் எண்ணெய் அல்லது பாரபின் எண்ணெயைத் தடவலாம்.

கால்களுக்கு ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்த வேண்டியது முக்கியம். அதற்கு என்ன செய்வது?

கால்களுக்கு ரத்த ஓட்டம் சரியாக இருந்தால்தான் கால் மற்றும் பாதங்களில் புண் ஏற்படாது. இதற்குக் கீழ்க்காணும் விஷயங்களில் கவனம் செலுத்துங்கள்:

நாற்காலியில் உட்காரும்போது கால்மேல் கால்போட்டு உட்கார வேண்டாம். மிகவும் இறுக்கமான காலுறைகளை அணிய வேண்டாம்.

தரையில் உட்காரும்போது, கால்களைக் குறுக்காக வைத்து அதிக நேரம் உட்காராதீர்கள். அப்படி உட்கார்ந்தால், ரத்தக்குழாய்களுக்கு அழுத்தம் அதிகமாகி, ரத்த ஓட்டம் தடைபடும். நரம்புகள் பாதிக்கப்படும்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் கணுக்காலையும் பாதங்களையும் அசைத்துக்கொண்டேயிருங்கள்.

**நகங்களை வெட்டும்போது கவனம்**

விரல் நகங்களைக் கடிக்காதீர்கள். நகங்களைக் கவனமாக வெட்டுங்கள். முக்கியமாக, பிளேடால் நகங்களை வெட்டாதீர்கள். நகவெட்டியால் வெட்டுங்கள். நகங்களை ஒட்ட வெட்டாதீர்கள். முக்கியமாக, ஓரங்களில் உள்ள நகங்களை வெட்டும்போது அதிக கவனம் தேவை.

**காலணியும் காலுறையும்**

வெறுங்காலில் நடக்காதீர்கள். சரியான அளவுள்ள காலணிகளை அணியுங்கள். எம்.சி.ஆர். அல்லது எம்.சி.பி.காலணிகள் நல்லது. விரல் நுனிகளை மூடும் வடிவத்தில் உள்ள காலணிகள் பாதுகாப்பானவை. குதிகால் உயரமற்ற காலணிகள் உகந்தவை. வீட்டிலும் காலணி அணிந்திருப்பதே நல்லது. ஈரமான காலணிகளை அணியாதீர்கள்.

பிளாஸ்டிக் காலணிகளைத் தவிர்க்கவும். ஷூக்களை அணிவதற்கு முன்பு சிறு கற்கள் போன்ற சிறு பொருள்கள் ஏதாவது இருக்கிறதா என்று சோதித்துவிட்டு ஷூக்களை அணியுங்கள். வியர்வையை உறிஞ்சும் பருத்தியினாலான காலுறைகளை அணியுங்கள். சரியான அளவுள்ள காலுறைகளை அணியவும்.




நைலான் வகைகளைத் தவிர்க்கவும்.

ரப்பர் மற்றும் எலாஸ்டிக் வளையங்கள் உள்ள காலுறைகளைத் தவிர்க்கவும். அவை காலுக்கு ரத்த ஓட்டத்தைக் குறைக்கும். மெல்லிய காலுறைகள் நல்லது. தடித்த காலுறைகள் உரசும்போது காயங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், அவற்றைத் தவிர்க்கவும். பாதங்களுக்கு அவ்வப்போது மசாஜ் செய்வது நல்லது.

**கால்ஆணி - கவனம்**

பாதங்களில் கால் ஆணி மற்றும் தோல்தடிப்பு இருந்தால், நீங்களாகவே பிளேடால் அல்லது கத்தியால் அறுத்து எடுக்காதீர்கள். இதற்கு டாக்டரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

புகைபிடிக்காதீர்கள் - புகையில் உள்ள நச்சுப் பொருள் ரத்தக் குழாய்களை தடிக்கவைத்து, உட்சுவரை இறுக்கமாக்கிவிடும். இதனால், புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்குக் கால்களுக்கு ரத்த ஓட்டம் தடைபடும். இதனால், கால் புண்கள் ஆறக் காலதாமதம் ஆகும்.

நடைப்பயிற்சி அவசியம் - தினமும் நடைப்பயிற்சி செய்யுங்கள். இது கால்களுக்கு ரத்த ஓட்டம் சீராகச் செல்ல உதவும்.

புண் ஆறத் தாமதம் ஏன் - சர்க்கரை நோயாளிகளுக்கு மட்டும் காலில் புண் வந்தால் ஆற வெகு நாட்களாகிறது என்பதை அறிந்திருப்பீர்கள் இதற்குக் காரணம் தெரிந்து கொள்வது நல்லது. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தத் தவறினால் அது ரத்தக் குழாய்களையும் நரம்புகளையும் பாதிப்பதால், காலில் தொடு உணர்வும் வலி உணர்வும் குறையும். புண் இருக்கிற பகுதிக்கு ரத்தம் தேவையான அளவுக்குச் செல்வதில்லை. இதனால், புண் ஆறுவதற்கு உதவுகின்ற சத்துப்பொருள்கள் புண்ணுக்கு வந்து சேருவதில்லை.

புண் ஆறுவதற்குத் தரப்படும் மருந்துகளும் சரியான அளவுக்குப் புண் இருக்கிற இடத்திற்கு வந்து சேருவதில்லை. வலியும், தொடு உணர்வும் குறைவாக இருப்பதால் நோயாளிகள் பலருக்கு ஆரம்பத்தில் காலில் புண் இருப்பதே தெரியாமல், சிகிச்சை பெறாமல் இருக்கின்றனர். புண் பெரிய அளவில் வந்தபின்புதான் சிகிச்சைக்கே வருகின்றனர். மேலும், ரத்தச் சர்க்கரையும் இவர்களுக்கு அதிகமாக உள்ளதால் புண்ணில் இருக்கிற கிருமிகள் அந்தச் சர்க்கரையைச் சாப்பிட்டு நன்கு கொழுத்துவிடுகின்றன.

இது போன்ற பல காரணங்களால் சர்க்கரை நோயாளிகளுக்குக் காலில் புண் வந்தால் ஆற வெகு நாட்கள் ஆகின்றன.